[illegible]
V.2 No. 34 29 Aug 1929

M211, N28 C9
N29.2.34
189069

131

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REG... MADRAS ...1929

Vol 2.] 1929 ஞு ஆகஸ்டு மீ 29உ [No. 34.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 661
2. அப்பர். (விஸ்தார கவி)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 663
3. சிந்தாமணி நீதிச்செய்புள்
V. பரமசிவன் 665
4. குலசேகரர் (பிறவி வேண்டுங் துறவி)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 667
5. வில்லிபாரதவிளக்கம் (இராசசூயச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை B.A, B.L. 670
6. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்துமாலை) 672
7. கம்பராமாயணம் (பூக்கொய் படலம்)
T. N. சேஷாசலம் B. A, B. L. 675
8. வர்த்தமானம் 679

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது.
மானேஜர்.

## கலா நிலயம்

### கல்சரும் கவிதையும்.

V

18069

கவிதையின் உண்மையும் கவிவரர்தன்மையும் இன்னதென விதுகாறும் தேர்ந்தோம். இனி, மன்பதைத் தொகுதிக்கு அதனான்வரு மரும்பெரும் பயன்களை மதித்திடத் துணிதல் ஏற்புடைத்தாம்.

எங்கெங்கும் கவிதையுடன் சேர்ந்துவருவது இன்பம்; இக்கவிதை எங்கெங்குச் சொரியப்பெறினு மங்கங்குள்ள மாந்தர், அவ்வின்பத்துடன் கலந்திருக்கும் ஞானத்தையும் ஏற்பதற்குத் தம்மனத்தைத் திறந்து வைப்பவ ராகின்றனர். புலவர்கள் தம்முடைய நூலை முட்டின்றி அரங்கேற்றினாராயினும் தமக்குரிய முழுப் புகழையும் அன்றைக்கே எய்திவிட்டவ ராகார். அச்சங்கத்திருந்த ஏனையோரும் அரங்கேற்றுமிப்புலவனுக்குப் பெரும்பாலும் கல்வியாலும் அறிவாலும் ஒத்திருப்பவர்; ஒருகாலத்தவர். இன்னோர் அந்நூலின்கண் விளங்கும் சில பொருள்களின் மேன்மையைக் கண்டு வியக்கலாம்; நூலினது ஆழத்தைக் கண்டு அதிசயங்கொள்ளலாம்; தாம் கற்றனவெல்லாம் எற்றே இவற்கென்று ஒருசிலர் கருத்தழியினும் அழியலாம். எனினும், அந்நூலின் பயனையெல்லாம் பெற்று உய்வதற்குப் பிற்றைநாள்மக்களே உரியவ ராகின்றனர். வியப்பினல்மாத்திரமன்றிப் பயனையும் அனுபவித்தபின்னர்ப் பாராட்டும் புகழ் முன்னையினும் பெரியதாம். அத்தகைய பயன் அனைத்தையும் அடைய அப்புலவனோடு ஒரு காலத்தவரா யிருந்தவர்க்கு இயலாது. அவர்களுக்கு நேரமில்லை. நூலினது பொருள், களம் மாறி நம்மிடத்து எய்தும்போது, சிரவணம் மனனம் பாவனை எனப் படிப்படியாய்க் காலவளவில் வளர்தல் முறை. சிரவணம் என்பது கேட்டல். கேட்டவற்றைச் சிந்தையிலிறுத்தி எஞ்ஞான்று முன்னினராயனுபவித்தல் மனனம். இன்னபடி மனனம் செய்வதால் சிந்தித்தபொருளின் தன்மையைச் சிந்தித்தவரடையும்படி புரிவது பாவனை. இப்பாவனை முதிர்ந்து அப்பொருளொடு நாம் இரண்டற்ற தன்மையில் ஐக்கியமாகிவிடல் முடிவு. கேள்விக்கினிமையாய், சிந்திப்பதற் குவகையாய், பாவனைக்கேற்ற அழகினதாய், ஐக்கியத்திற்கு ஆனந்தமயமான பொருள்களை, மொழியாலிசைத்து நல்குகின்ற மேன்மை, மனோபாவமென்னும் அத்திப்பிய சக்தியின் பூரண தோற்றமாய மாபெருங் காப்பியங்கள்மாட்டுப் பொலிவுற விளங்குகின்றது. இத்தகைய காவியங்கள் கைதரக் கடக்கரும் இடுக்கண் யாதொன்றுமில்லை; எய்துதற் கருமையான ஈசனும் இல்லை. தரும சாஸ்திரங்களெல்லாம், கவிதை

TL
m2Y/N28KN

சிருஷ்டித்துத் தந்த நல்லுணர்வுகளையும் அழகிற்கியன்ற சிந்தனைகளையும்,வரிசைக்கிரமப் படுத்திவைக்கின்றனவே யன்றி, அவை செய்தனவும் செய்ய வல்லனவும் வேறொன்றுமிலது. தருமசாஸ்திரங்களும் நீதிநெறிச் சாரங்களும் அவ்வரிசைக்கிரமப்படி நமது குடிவாழ்க்கையும் மனைவாழ்க்கையும் இடையூறின்றி நடக்குமாறு தக்க முறைகளை அமைத்துத்தந்து உதாரணங்களும் காட்டலாகின்றன. எனினும் அவை வேரின்றிவைத்த மரம்போல் வளராதழியக் காண்கின்றோம். நீதிபோதனைகள் நிறைந்தில்லாததாலோ, மற்று அவைகளை அறியாததாலோ மாந்தர்பால் இந்நாள், பொய்யுங் குறளையும் பயனிலசொல்லும், வஞ்சனையும் வீணவாவும் வெகுளியும், பழிபாவங்களுக்கஞ்சாச் செயல்களும் உலோபமும் மலிந்து கிடக்கின்றன! நான் நான் எனது எனது எனத் தருக்கித்திரிவதால் சுகம் பல கண்டதாலோ தன்னை மறந்திருக்கக் கணமும் தரியாது மாந்தர் திரிகின்றனர்! சட்டங்களும், அவைகளை மீறுவதற்குத் தக்க தண்டனைகளும் அத்தண்டனையை நடத்திவைக்கும் உத்தியோகஸ்தர்களும் எண்ணிறந்திருப்பினும்,கொலைக்கும் களவிற்கும் குறைவில்லையே. நீதிபோதனைகளேனும் சட்டவிதிகளேனும் யாவரையும் நல்லாற்றுப்படுத்தியதில்லை. படுத்தும் வன்மை அவைகளின்பா லில்லை.

கவிதையோ இக்கருமத்தை வேறோர் திப்பியவகையில் ஆற்றுதற்குத் தலைப்படுகின்றது. அது மனதை அகற்றிப் பல்கோடி எண்ணங்கள் அம்மனத்தின்கண் பொருந்திக் கலந்துவாழ இடமமைத்துத் தருகின்றது. உலகத்தினழகை மறைத்திருக்கும் திரைநீங்க நாடோறும் நாம் பழகியறிந்துள பொருள்களெலாம் கவிதையின் செய்கையால் புதியபுதிய தோற்றத்தைப் பெறலாகின்றன. கவிதை காட்டுவன யாவும் நமது உள்ளத்தில் புக்கு, அங்குமோர் பிறவி மீண்டு மெடுக்கின்றனவென இயம்பலாம்; மனனம் செய்தவர் மனத்தில் இவ்விதம் அவதரித்தவை, கவிதையின் திகழொளிதயங்க நிலவுவனவாகி, அந்நாள்தொட்டு அவ்வவற்றின் தன்மைகளின் ஞாபகசின்னங்களாயமைந்து எல்லா எண்ணங்களையும், அவ்வெண்ணங்களை ஆதாரமாகப்பற்றி நிகழும் செயல்களையும் தம்வய மாக்கிக்கொண்டு அமைதியும் திருப்தியும் அளிக்கின்றன. அறநெறியின் மறைபொருள் அன்பு. அன்பெனப்படுவது, நாமே நம்மைவிட்டு வெளிச்சென்று, நம்முடையதல்லாத எண்ணங்களிலும் செயல்களிலும் பொருள்களிலும் உள்ள அழகினோடு வேற்றுமையின்றி ஐக்கியமாக்கிக்கொள்கின்ற தன்மையேயாம். மிகவும் தகவுடைய நல்லவனென்று ஒருவன் இருக்க வேண்டுமாயின் அவனது மனோபாவம் கடல்போல் ஆழமும் அகலமும் உடையதாய் இருத்தல்வேண்டும்; மற்றவர் நிலையில் தன்னை வைத்துக்கொள்ளக்கூடிய சக்தி அவனுக்கு இன்றியமையாததாம். பிறருடைய இன்பமும் துன்பமும் தன்னுடைய இன்பமும் துன்பமுமே ஆதல்வேண்டும். அறநெறி நன்மைக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்றவோர் இணையிலாக் கருவி இம்மனோபாவம்; கவிதையானது மூலகாரணமாகிய அம்மனோபாவத்தைப் பண்படுத்திப் பெருக்குவதால் அதன் காரியமாய அன்பும், அவ்வன்பின் செயலாகிய அறமும், அவ்வறத்தால் வரும் இன்பமும் யாவும் அக்கவிதையின் பயன்களாகின்றன. மனோபாவத்தின் எல்லையைக் கவிதை அகலமாக்குகின்றது. இடமகலவகல அதனை நிறைப்பதற்கு மேன்மேலும் எண்ணங்கள் சேரவேண்டியது அவசியமாவதால் புதுப்புது உவகைநல்கும் எண்ணங்கள் தொடரவந்து குடிப்புகவே, அவைகளும் முன்னிருந்த எண்ணங்களுக்கு இனமாய வண்ணம்பெற்றுப் பல்வேறு துறைகளிலும் நல்வாழ்வு நிலைத்தவர்களாகின்றோம். ஒவ்வொரு கருமத்திற்கும் ஏற்ற உறுப்புக்கள் நம்பால் இருப்பது போலவே, மனோபாவம் அறநெறியில் நடத்துகின்ற உறுப்பு என்னலாம். தேகப்பயிற்சி உடலின் உறுப்புக்களை வலியுறச் செய்வதுபோன்றே கவிதைப் பயிற்சி அம் மனோபாவமெனும் அறத்துறையுறுப்பிற்கு வலிவு அளிக்கின்றது. ஆதலின் கவியெனுமொருவன், நன்மை தீமை பாவம் புண்ணியம் என்பவைகளைப்பற்றித் தான்கொண்டுள கொள்கைகளைத் தன்னால் சிருஷ்டிக்கப்படும் காவியத்தில் கலக்காதிருப்பது நலம். ஏனெனில், இக்கொள்கைகள் அவனது காலத்தையும் தேசத்தையும் பொருந்தித் தோன்றுவன; கவிதையோ கால தேச நிலைகளோடு ஒருபோதுங் கலவாது எக்காலத்திற்கும் எத்தேசத்திற்கும் ஏற்றதோர் தன்மை வாய்ந்தது. காரியத்தின் குணகுணங்களைவகுத்துக்காட்டுவதிலும் காரணத்தை அமைத்துத்தருவதே உயர்ந்தோர் செய்கையாம். ஆதலின் மனோபாவத்தினோடு பயில்கின்ற கவிதையை மட்டுமே பற்றித்தங் கவிகளைப் பாடுவார்களாயின் அத்தகைய பெருங்காப்பியம், ஒருநாளும் வற்றாத பேரறிவும் அகமகிழ்வும் வழிந்து பெருகுமொரு பொய்கையாம். அகழஅகழத் தங்கமே விளையும் சுரங்கமும் அதுவே. ஒரு காலத்தார், ஒரு தேசத்தார், கல்வித்திறமை வாய்ந்தவொருவர், அதன் புதைபொருள்களை எல்லாம் எடுத்துக்கொண்டுவிட்டதாக எண்ணினும், மறுகாலத்தார் பிறதேயத்தார் வேறோர் கல்விமான் அதனின்று பின்னும்பின்னும் தத்தந் தன்மைக்குத்தக்கபடி முன்னோர் நினைத்துமறியாப் புதுச்செல்வப் புத்துவகைப் பெற்றுவரக் காண்கின்றோம்.

மனோபாவத்தின் பயிற்சி மிக்கதோர் மகிழ்விற்கே இடமாயிருக்கலாமே யல்லாது, பகுத்தறிவின் காரியங்க ளல்லவோ உண்மையிலே உபயோகமானவை, எனச் செப்புவார் சிலர். இவ்வேற்றுமையில் அடங்கிய கருத்தை ஆராய்ந்து பார்ப்பதன்முன் "உபயோகம்" என்பதன் பொருள் யாதெனத் தேர்தல்வேண்டும். "சொல்வோரிற் கேட்பவர்அருமை" என்ற தலைப்பின்கீழ் நாம் சென்ற ஆண்டு, கவிவரர் இரவீந்தரநாதரின் கட்டுரையொன்றை விளக்கிவந்தபோது அவரது உதவிகொண்டு இவ் "உபயோகம்" என்ற வாசகத்தின் நிலைமையை ஒருசிறிது செப்பலாயினோம். பொதுவாக,இன்பம் அல்லது நன்மைஎனப்படும் ஒன்றையே சீவகோடிகளனைத்தும் நாடுவதும், நாடி அதை அடைந்தக்கால் திருப்திபெறுவது மாகின்றன. இன்பமென்பது இருவகைப்படும். ஒன்று, என்றென்றும் தங்கி எவற்றிற்கும் உரியதாய் நிலைத்திருப்பது; மற்றது,சிறப்பாக ஒன்றற்கேயுரியதாய்ச் சிறிதே தோன்றி மறைவது. உபயோகம் என்பது முன்னதை விளைவிப்பதற்கு ஆதரமாயிருப்பதற்கும் பொருந்தும், பின்னதை விளைவிப்பதற்கு ஆதாரமா யிருப்பதற்கும் பொருந்தும். முன்னதாயின், புலன்களுக்குத்தூய்மையும் நோன்மையும் புரிந்தும், மனோபாவத்தை விசாலப்படுத்தியும் அறிவிற்கு ஆவியும் அளித்தும், உதவுவனயாவும் உபயோகமானவைகளே. ஆயினும், விலங்கொடு மக்களுக்குப் பொதுவாய யாக்கையைப்பற்றிய குறைகளை நீக்கியும்,கள்வர் பகைவர் முதலியவர்களால் வரும் கேடுகளினின்றுகாத்தும், முழுமூட நம்பிக்கைகளைப் போக்கியும், சுயலாபத்திற்கு இடையூறு இல்லாத போதேனும் மற்றவரும் வாழட்டும் என்ற நினைவை வரச்செய்தும், விவகரிக்கின்றவைகளே உபயோகமானவை என்றவொரு குறுகிய பொருளும் அதற்குளது.



இந்தக் குறுகிய பொருளில் உபயோகமானவைகளை விருத்திசெய்கின்றவர்களும் சனவாழ்க்கைக்கு வீணனவ ரல்லர். அவர்கள் செய்யக்கூடியனவும் செய்ய வேண்டியனவும் சிற்சில இருக்கின்றன. உத்தம உணர்வினர்,உயர்குணத்தவர்,வித்தகமேன்மையர் இத்தகைய கருமங்களைக் கைக்கொள்வாராயின், கவிகளது அடிகளையேபின்பற்றிக் காவியங்கள் குறிப்பாலுரைத்தவைகளுக்கு நமது தினசரிவாழ்க்கை ஓர் விருத்தியுரையே என்னும்படி ஆக்குவார். அத்தகையோரல்லாதார், தம் கல்லாத வாயையும் பொல்லாத கையையும் கொண்டு ஜனவாழ்க்கையை உழக்கப்புகுவாரேல், "உபயோகம், உபயோகம்' என்றவொரு முழக்கினால் ஆன்மாவிற்குரிய உயரியநிலையும் உடலிற்காகிய தாழ்ந்த இடமும் தலைதடுமாறி அலைந்து இரண்டுமே அழிந்திடாது என் செய்யும். ஆகையால்,பகுத்தறிவு என்றபேரைச்சொல்லிக்கொண்டு நமதுமூடநம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் தொலைக்கவருகின்றேன் என்பார்பலர்,அதனோடு மாந்தரது மனோபாவத்தில் தொல்லைநாட்தொட்டுப் பொறித்துள சில சாச்வத உண்மைகளையும் அழித்துவிடுகின்றனர். பூதசாஸ்திரத் தேர்ச்சியுள்ளவர்கள், தொழில்வளர்ச்சிக்கு வேண்டிய எந்திரங்களைச் செய்தமைக்க வமைக்க, பொருளாதார முறைவல்ல நிபுணர்கள் முதலாளிக்கும்தொழிலாளிக்கும்பொருள் விளைப்போர்க்கும் விற்போர்க்கும் வாங்குவோர்க்கும் தக்கதிதுதகாததிதுவென ஏற்பாடுகள் செய்யச்செய்ய அரசியல்வாதிகளும் அச்சபை அறிஞர்களும் எவ்வளவோ சட்டங்களை விதிக்கவிதிக்க, கார்லைல்சொன்னபடி,வீண்போக மொருபுறமும் வறுமையின்கொடுமை மறுபுறமும் கனற்றலாவதையே ஏன்நாமின்னாள் மேனாடடங்களும், அதனை நீங்கா நிழல்போல் தொடர்கின்ற இத்தேயத்திலும் காணலாகின்றோம்.பணக்காரன் பின்னும் பணக்காரனாகின்றான், ஏழையோபின்னும் ஏழையாகின்றான். ஜனவாழ்க்கையோ இவ் விரண்டிற்குமிடையே எற்றுண்டு தள்ளாடுகின்றது இதுவே நாம் இந்நாள் கண்ட பயன். மனோபாவத்தைச்சார்ந்த மூலதத்துவங்களுடன் இணங்குதலின்றி நடக்கும் முறைகள்பற்றி வரம்பிலாது கணக்கிடும் சாமர்த்தியத்தின் செயலெலாம் இப்படியே!

நீதிநெறி அரசியல்முறை சரித்திரப்பாடம் முதலியவைகளைப்பற்றிய அறிவு நமக்கு வேண்டிய அளவு இருக்கின்றது; அவ்வறிவைப்பழக்கத்தினுட்கொண்டு வருவதற்குத்தான் நாமிப்பொழுது கற்க முயல்வதில்லை. மேன்மேலும் இவைகளை ஆராய்ந்து ஆராய்ந்துகொண்டு போய்ப்போய் அதனால் எய்தக்கூடிய இலாபத்தைக் கணக்கிட்டுக் கணக்கிட்டுப் பார்ப்பதனிடையே, இவ்விடயங்களைச் சார்ந்த எண்ணங்களினுள்ள கவிதையை அடியுடன் மறந்து விட்டோம். அறத்துறையிலும் அரசியல்முறையிலும்இவையனைய பிறவற்றிலும் தக்கநெறி எதுவென்றஅறிவிலோ குறையில்லை. ஆயினும் அவ்வறிவெலாம் அவலமாய்ப்போவதன்காரணம் யாதென வினவுவார்ஐயம் இதுவரையில் நாமிங்கு உரைத்துவந்தவைகளினின்று தீர்ந்திருக்கும். சுருங்கச்சொல்லின், அவ்வறிவினோடு அதனைச்சிந்திப்பதற்குரிய மனோபாவமும் வேண்டுமே. அம்மனோபாவத்தால் சிந்தித்தபடி செய்வதற் கியன்ற வண்மையுணர்ச்சியும் வேண்டும்—கவிதையொடு கலந்த வாழ்க்கை நமக்குவேண்டும். இவையில்லாத குறையாற்றான் அறிவுஞ் செயலும் வேறாகிப் போகின்றன. நாம் போடும் கணக்கெல்லாம் முதலிற்கொண்ட கருத்தைக் கடந்தோடிவிட்டன. ஜீரணசக்திக்கு மதிகமாகத் தின்றுவிட்டோம். புறவுலக எல்லையைப் பெருக்க முயல்கின்ற இச்சாஸ்திரங்களின் பயிற்சியாவும், அவை கவிதாசக்தியோடு கலவாதலால், உள்ளுலகத்தைக் குறுக்கிவைக்கின்றன. கடலையுங் காற்றையும் அடிமை கொண்டவர், தாமே பின்னும் அடிமைகளாயிருக்கின்றனர். எனின், முன்னுரைத்த விபரீதங்கள் நேர்வது விந்தையாமோ!

...ICE OF THE REG... ... 1929 MADRAS

# அப்பர்

## 5. அப்பர் கவித்திறம்.

### 1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

வித்தாரகவி - சிறப்பிலக்கணம்.

645 பக்கத் தொடர்ச்சி

விஸ்தார கவியின் தசவிதப் பொருத்தங்களில் மங்கலம், சொல், பால், வருணம், உண்டி, என்னும்ஐவகைப் பொருத்தங்களும் அப்பர் தேவார வாயிலாய்க் கண்டோம். ஏனைய பொருத்தங்களும் திருவருட் சொரூபமான அவர் பதிகங்களுக்கேனும், செய்யுள் நாயகனுக்கேனும் அமையவேண்டிய அவசியமில்லை யெனினும், இத்தேவாரத் திருமுறைகள் முற்றும் திருநாவுக்கரசுநாயனார் இவற்றை நினைவில் வைத்துப் பாடினதாகவே காணப்படுகின்றன. நஞ்சு அமுதமென்னும் உணவுகளான எழுத்துக்கள் தசாங்கமான தானங்களிலும் அப்பர் தேவாரத்தில் தகுந்தவாறு அமைந்தமை கண்டோம். "வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்....உளமே புகுந்த வதனால், நாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம் வெள்ளி சனி பாம்பிரண்டும், "ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறு முடனாய நாள்க" ளும், அடியார்க்கு மிகவும் நல்லநல்ல" என்றதனால், அக்கரப் பொருத்தம், நாட்பொருத்தம், கதிப்பொருத்தம்,

கணப்பொருத்த மென்பன இறப்புப்பிறப்புக் கந்தமான செய்யுட்டலைவனுக்கு அநாவசியமே. ஆயினும் ஏனைய மனுடருக்கு வித்தாரகவி யிலக்கணம் வகுத்த வரம்பிலேயே, இலக்கணப் புலியாகிய அப்பரும் இப்பொருத்தங்களமைத்தே தேவாரப்பதிகங்கள் பாடியதைக் காண்க. இதில் சற்றுச் சோதிட சாஸ்திர வரம்பிற் புகினும், கீழ்க்குறிப்பன தமிழிலக்கணச் சட்டங்களாம். அவற்றைத் தானத்தினின்று காண்போம்.

எழுத்துக்கள் வரும் தானம் தசாங்கமெனக் கண்டோம். அத்தானங்களில் அமுத எழுத்துக்களின் விசேடமும்,நச்செழுத்துக்களின் தாழ்வும்கண்டோம். தானப்பொருத்த மாவது :—

“குற்றெழுத் தைந்து மொத்தநெட் டெழுத்தொடும்
ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்தை
இ உ வென்னு மிரண்டொடும் சேர்த்திப்
பால குமார விராச விருத்த
மரண மென்ன வகுத்திறை வன்பெயர்
முதலெழுத் தினைமுதற் பொருத்தம தாக
முதற்சீ ரிடத்து முதற்க ணின்ற
வெழுத்தொடு தாக்கி யிடமுதன் மூன்றும்
விழுத்தகு மூப்பு மரணமும் விலக்கே ”

என்றார் இலக்கணவிளக்கத்தார். இங்கு இறைவன் இயற்பெயர் யாது எனின் அதற்கு மறுமொழி, அடியிற் குறித்த அப்பர் தேவாரப் பாசுர முற்பகுதியாகும் :—

பேராயிரம் பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராத நோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திருபுரங்கள் தீயெழத்திண் சிலைக்கைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.
திருப்புள்ளிருக்கும் வேளூர் — திருத்தாண்டகம் 8.

எழுத்துப்பொருத்த மாவது:—முதற்சீ ரெழுத்தினையெண்ணுமிடத்து வியனிலையாகிய மூன்றெழுத்தும், ஐந்தெழுத்தும், ஏழெழுத்தும், ஒன்பதெழுத்தும் பொருத்தமுடையன வென்றும், சமநிலையாகிய நான்கெழுத்தும், ஆறெழுத்தும், எட்டெழுத்தும் பொருந்தாவென்றும்கூறுவர். ஆயினும் முதற்சீர்மங்கலச்சொல்லாயின்நான்கெழுத்தாயிருப்பினும்(உலகம், அமுதம் என்பனபோல) இப்பிறழ்ச்சி அமைவுடையதென்பர்.

நாள்பொருத்தம் :— நாட்பொருத்தம் அறிவதற்குமுன் எவ்வெவ்வெழுத்துக்கள் எந்நட்சத்திரங்களுக்குரியவென்பதை இலக்கணமுறையிற் காண்போம். உயிரெழுத்துக்களில், அ, ஆ, இ, ஈ என்பன கார்த்திகைக்கும், உ, ஊ, எ, ஏ, ஐ என்பன பூராடத்திற்கும், ஒ, ஓ, ஔ, என்பன உத்திராடத்திற்கும் உரியனவென்றெடுத்தனர் புலவர். மற்றைய .—

(i) ககர வருக்கத் தொருநான் கிரண்டும்
திகழ் திருவோணந் திருவாதிரையாம்.
(ii) பிற்பான் மூன்று மூன்றும் பேசிற்
பொற்புறு புனர்தம் பூசமாகும்.
(iii) சகர வருக்கந் தனின் முதனன்கும்
புகலுங் காலைப் புருட நாண்மே
லைந்து மூன்றச் சுவனி பரணி.
(iv) உற்ற ஞகரத் தொருமூன் றினையு
மற்றை யவிட்ட மாமெனப் பகர்வர்.
(v) மன்னிய நகரத் திரண்டேழ் மூன்று
தன்னியற் சோதி விசாகம் சதயம்.
(vi) ஆங்குறு நகரத் தாறு மூன்றமூன்
றோங்கும் பனை துளங்கொளி பூரட்டாதி.
[பனை = அனுடம்; துளங்கொளி = கேட்டை]
(vii) நற்பக ரத்தி ஞன்கிரண் டாறு
முற்படு முத்திரந் தொட்டு மூன்றே.
(viii) ஆறு மூன்று மூன்று மகரத்திற்
றேறு மகம் கட்செவி யொண்பூரம்.
[கட்செவி = ஆயிலியம்]
(ix) உற்ற யா வொன்று முத்திரட்டாதி
யூ யோ விரண்டு மேயு மூலம்.
(x) எடுத்த வகரத் திருநான் கிற்கு
மடுத்த ரோகணி மான்றலை யாகும்
[மான்றலை = மிருக சீரிடம்]

இனி நாட்பொருத்தமாவது : பாட்டுடைத் தலைவன் பெயரின் முதலெழுத்திற்கு உரியநாள் தொடங்கி உறுகின்ற (நாட்கள்) இருபத்தேழு நட்சத்திரங்களையும்,ஒன்பதொன்பதாகப் பகுத்துச் சென்மம், அனுசென்மம், உபசென்மம், என்று கூறப்பட்ட முப்பகுதியில் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு எண்ணின் வந்த நாட்கள் பொருத்தமுடையன வல்ல இரண்டு, நான்கு, ஆறு, எட்டு இவைகளின் நின்ற நாட்களைப் பொருத்தமுடையவாக முதற்சீரை யெடுத்துச் செல்லுவர் * இதன்றியும்

எட்டா மிராசியும் $ வைநா சிகமும்
விட்டு முதற்சீர் விளம்புதல் மரபே.

கதிப்பொருத்தம்:—கதிப்பொருத்தமும் முதன்மொழிக்கே யாம் - றகரவொற் றல்லாத ஏனை வல்லொற்றைந்தும், ஒ, என்னும் குற்றுயிரல்லாத ஏனை நான்கு குற்றுயிரும் தேவர்கதியின் கூறும். ஆ, ஈ, ஊ, ஏ என்னும் உயிர்களும் ணகரவொற்றல்லாத ஏனை ஐந்து மெல்லொற்றும், மக்கட்கதிக்கு உரிய வெழுத்துக்களென்பர் மேலோர்:—

ஈறில் வன்மை குறிலிமை யோர்க்காங்
கூறு நெடின்முத னன்கு மென்மை
யந்த மொன்றொழித் தல்லன மக்கண்
முந்துங் கதியிவை முதன் மொழிக்காகும்.

இவ்விரு கதியுமே முதன்மொழிக்குப் பொருத்தமானவை.

ஏனையகதிகள் விலங்கின் கதியென்றும் நரகர்கதியென்றும் தள்ளப்பட்டன பொருந்தாதனவாம்:—

ஓ ஔ யரல ழறவெனு மேழுந்
தொக்க விலங்கின் சூழ்கதி யேனைய
நரகர் கதியிவை நவையெனப் புகல்வர்.

---

* இறைவன் பெயர்முத லெழுத்தை நோக்கி
யுறுநா ளினைமூ வொன்ப தாக்கி
யொன்றுமூன் றைந்தே ழொருமுத் திறத்தினு
மொன்று வண்ண முறைமுதற் சீரே.
இலக்கண விளக்கம் 796.

$ இறைவன் பெயர்நாட்டொடங்கி யெட்டாமிராசிக்கண்ணுற்ற இரண்டேகால் நாளும் எண்பத்தெட்டாங்கால் பொருந்திய வைநாசிக நாளுந் தள்ளிப் பொருத்தமுடைய நாள்களைக்கொண்டு இறைவன் பெயர்க்கு முதற்சீர் எடுத்துக் கூறல் மரபு.



கணப்பொருத்தம்:—ஆதியினும், இடையினும், இறுதியினும், முற்றினும்மேற்செய்யுளியலுட் கூறிய நேரசையும், நிரையசையுமாய் வரின் ஆதிநேர் நீர்க்கணமெனவும், இடைநேர் தீக்கண மெனவும் இறுதிநேர் ஆகாய கணமெனவும் முற்றுநேர் சுவர்க்க (இந்திர) கணமெனவும், இடைநிரை சூரியகணமெனவும், ஆதிநிரை சந்திர கணமெனவும், இறுதிநிரை வாயுகணமெனவும், முற்றுநிரை பூ கணமெனவும், ஆகும். இவற்றுள் முற்றுநேரும் முற்றுநிரையும், ஆதிநேரும் ஆதிநிரையும் முதற்சீருக்குப் பொருத்தமுடையனவாம்

நீரது கணமே சீர்சிறப் பெய்துந்
தீயின் கணமே நோயது சேரும்
அந்தர கணமே வாணு ளகற்றும்
இந்திர கணமே பெருக்கம் செய்யும்
சந்திர கணமே வாழ்நாள் தரூஉம்
சூரிய கணமே வீரியம் போக்கும்
மாருத கணமே சீர்சிறப் பகற்றும்
நிலக்கணந் தானே மலர்திரு விளங்கும்.
மாமூலர்.

இந்திரகாளியார் கணநாட்பொருத்தம் இவையிவையென்று கூறி அடியில் வருமாறு அவற்றின் பலனும் கூறுகின்றார்:—

“ வருண கணமே சதய மென்ப
சந்திர கணமே மிருக சீரிட
மந்திர கணமே புனர்பூச மாகும்
வாயு கணமே சோதி யாகும்
சூரிய கணமே பூச மென்ப
தீக்கணந் தானே கார்த்திகை யென்ப
பூமி கணமே கேட்டை யாகும் ”

இவற்றின்பலன்

“ நிலையே செல்வஞ் சூலை நலநீக்கல்
கொலைபிணி நன்மை யின்பம் கூறே ”

தானப் பொருத்தமும் நாட் பொருத்தமும் கணப்பொருத்தமும் குற்றம் வரல் ஆகா ; தலைவன் இயற்பெயரைக் குறித்து மங்கலச்சொற்குக் குற்றப்பாடுளதாயின் அம்மங்கலச்சொற்கு அடைகொடுத்துக் கூறுதலும் பரியாயச் சொற் கூறுதலும் உரியனவாம். அம்மங்கலச் சொல் முதற்கணன்றி நடுவினும் இறுதியினும் நிற்கவும் பெறும். அத்தகைய உதாரணங்களும் அப்பர் தேவாரச் செய்யுட்களாலும் காட்டப்பட்டன.

மேற்கூறிய கணங்களன்றிப் பிரமகணம், இலக்குமி கணம், சுரபிகணம், கருடகணமென்னும் உரிமைகட்கு உட்பட்டு அகலகவி முதற்கட் பயின்று நடக்கும். அதன் விதி :—

நேரீற் றியற்சீர் வெண்சீர் முன்னு
நிரையீற் றியற்சீர் கனிச்சீர் பின்னும்
தேறுங் காலைச் சிறப்புறு மவையே
யயன் றிருக் கோக்கருடன் கணமென்னப்
பயின்றிடு மியற்சீர்ப் பரிசுரைத் திடவே.

அதாவது நேரசையிறுதி தேமா, புளிமா வென்னும் இயற்சீரிரண்டும் வெண்பாவுரிச்சீரின் முன் நின்ற தேமாங்காய், புளிமாங்காய்போல முறையே சுவர்க்க (இந்திர) கணமும், சந்திரகணமுமா மெனினும் அவை பிரமகணம், இலக்குமி கணமென்பர் புலவர். அங்ஙனமே நிரையசை யிறுதியாகிய கருவிளம் கூவிளமென்னும் இயற்சீரிரண்டும் வஞ்சியுரிச்சீரிற் பின்னின்ற கருவிளங்கனி, கூவிளங்கனிபோல நிலக்கணம் நீர்க்கண மாமெனினும், அவை சுரபிக்கணமும், கருடக்கணமுமெனப் புகழப்படும்.

இவ்வாறு அகலகவி பல நிபந்தனைகட்கு உட்பட்டு நிகழவேண்டிய கவியாகும். தசாங்கத்தில் ஒரு சீராலே முடிவுபெறப்பாடுவது இலக்கணமாம். பிரித்து வேறுசொன் முடிபுகொடுத்துக் கூறல் குற்ற மென்பர். இங்ஙனம்

கூறிய விலக்கணம் குறைபா டின்றித்
தேறிய மூவகைச் சீர்முத லாக
வகல கவிதான் அமையு மென்ப

## சிந்தாமணி நீதிச் செய்யுள்

[649 பக்கத் தொடர்ச்சி]

“நீணில மாரியின்றி விளைவஃகிப் பசியுநீடி” என்ற அடியை ஆராய்வோம். மாரியின்றேல் விளைவஃகுமென்பதனை

‘ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்’’

என்ற வள்ளுவர் வாய்மொழியாற் பெறுது மன்றோ? மாரியின்றேல் பசி மிகும் என்பதனை

“விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி”

என்ற வாய்மையானறிக. மாரி யில்லாகுமாயின் விளைவஃகுமென்பதூஉம் விளைவஃகுமேல் பசிமிகு மென்பதூஉம் தெளிவுற விளங்கல் அறிக. இனி

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழு
பெய்யெனப் பெய்யு மழை.” [வாள்

[வேறு தெய்வங்களை வணங்காது தன் கணவனையே தெய்வமாகக்கொண்டு வழிபடுவாள் பெய் என்று சொன்னவளவின் மழை பொழியும்] என்ற குறளினையும்

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு.

என்ற சிலப்பதிகார உரையையும்,

இன்னிசை யெழிலியை யியம்பவு மியைவதோ
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மியைவதோ
[எழிலி - மேகம்; கனலி - சூரியன், வளி - காற்று, இயைவதோ - பொருந்துவதோ.]

என்ற பாலைக்கலித் தொடர்களையும் வைத்து மேற்குறித்த சிந்தாமணிச் செய்யுட்கோர் புதுப்பொருள் காண்போம். இப் பாலைக்கலித் தொடர்கள் கற்புடைப் பெண்களுக்கோர் இலக்கணத்தைக் கூறுவதாக எண்ணல் வேண்டும். மற்றைச் சிலப்பதிகாரத் தொடர்களும், வள்ளுவர் வாய்மொழியும் இவ்விலக்கணத்தைக் கொள்ளுவதா லுறும்பயனைக் கூறுவதாகவும் கருதலாம்.

அரசனுடைக் கோல் செந்நெறியிற் செல்லா
தொழியுமாகில் மகளிர் கற்பு அழியுமென்று சிந்தா
மணி செப்புகின்றது. "பத்தினிப் பெண்டிர்" உறை
யும் நாட்டகத்து "வானம் பொய்யா" தென்றும்
"வளம்பிழைப்பறியாது" எனவும் "நீணில வேந்தர்
கொற்றம் சிதையாது" எனவும் சிலப்பதிகாரம் பகர்
கின்றது. இவ்விருகருத்துக்களும் சிந்திக்தற்பாலன.
பத்தினிப்பெண்டிர் உறையும் நாட்டிலுள்ள அரசன்
கொற்றம் ஒரு போழ்தும் கோடாது என்ற இளங்
கோவடிகளவர் கருத்தும், அரசன்கோல் அறநெறிக்
கட் செல்லாதாயின் மகளிர் கற்பழியும் என்ற திருத்
தக்கதேவனர் கருத்தும், சிறிது நுணிகி ஆய்வார்க்கு
ஒன்றிய கருத்தாகவே தோன்றும். இவ்வாராய்ச்சியி
னுக்கு வாசகர்களை ஒருப்படுக. யான் விளக்கிற்
பெருகுமாகலின் வாசகர்களின் இவ்வாராய்ச்சியினுக்
குப் பயன்படுமாறு இரண்டு குறள்களையும் கீழே
தருகின்றேன்

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

[விதிமுறையினின்றும்பிறழாதுசெங்கோலைச் செலுத்து
கின்ற மன்னவன் நாட்டின்கண்ணே பருவகாலத்திற்றப்பா
மழையும் நல்லவிளைவும் உண்டாகும்.]

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்

[நெறிபிறழ்ந்த முறையால் மன்னவன் பொருள்செய்வனு
யின் பெய்யுங்காலத்துப் பெய்யவேண்டியமழை யின்றாகும்]

சாதலும் பிறத்த ருனுந்
தம்வினைப் பயத்தி னுகு
மாதலு மழிவு மெல்லா
மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லா
நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய்
பெய்வளைத் தோளி என்றான்.

[வளையல்கள் பெய்யப்பட்ட தோளி, இறத்தலும் தோன்
றுதலு மெல்லாம் தத்தம் வினையின் பயனாலாகும். தோன்
றுதலும் அழிதலும் செல்வத்திற்கு இயல்புகண்டாய். இறத்
தலுக்கும் பிறத்தலுக்கும் தோன்றுதலுக்கும் வருந்துத
லும் மகிழ்தலும் அறிவிலாமையா னிகழ்வதாகும்]

இச்செய்யுட்கண் புறநானூற்றுப் பாவொன்று
நின்று மணஞ்செய்தல் கண்டுகளித்தற் குரியதாகும்.
அப் பா வருமாறு.—

" யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றுந் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே"

இறத்தலும் பிறத்தலும் தத்தம் ஊழ்வினைப் பய
னின் விளைவென்பது மேலே குறித்த சிந்தாமணிச்
செய்யுளின் கருத்தாகும். ஊழ்வினைப் பயத்தினுலே
இன்பமுந் துன்பமும் உண்டா மென்பதனைக் கீழ்
வரும் நாலடி வெண்பாவா னுணர்க.

ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது

[நெருங்கிய கடல்சூழ்ந்த உலகத்தில் எல்லோரும், எவ்வ
ளவு சிறிய அளவினதாயினுந் துன்பத்தை விரும்பார்; அவர்
கள் விரும்புவன நல்ல இன்பங்களேயாகும். அவர்கள் அதை
விரும்பினும் விரும்பாதொழியினும் பழவினையான் வந்
துறுவன (இன்பதுன்பங்கள்) அவர்களை அடையாமல்விட்டு
விடுதல் இல்லையாம்!

யாண்டும் நிறைவுற்றுத் ததும்பும் பரசிவ வெள்ளத்
தின்கண்ணே குமிழிகளாகவும் அலைகளாகவும் கிள
ம்பி அமைவன உயிர்கள். ஈங்கு நாம் எல்லாப் பிறப்
புக்களையும் அடைந்து பரிணாம ஏணியின் பேருதவி
யால் மேலேறிச் செல்ல நிற்கின்றோம். இக்கொள்
கையை

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசு ரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேனே"

என்ற வாதவூரடிகளார் உரைஅரண்செயல் காண்க.
இனிப் பொருள்களின் இயல்பாவது, "ஆதலும் அழி
தலுமாகும்" என்ற கருத்தை ஆராய்வோம்.

"உடைமையும் வறுமையு மொருவழி நில்லா"
என்ற பாண்டியன் கொள்கையும்

" கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று"

என்ற வள்ளுவர் வாய்மையுங் கொண்டு செல்வ நிலை
யாமையை உணர்க. மூன்றாவது அடியாய "நோத
லும்" என்றதற்கு "நன்றாங்கால் நல்லவாக் காண்பவர்
அன்றாங்கால் அல்லற்படுவதெவன்" என்ற குறட்
குருத்தினைத் தெளிந்து ஆராய்க.

எல்லை யெய்திய வாயிரச் செங்கதிர்
மல்லன் மாக்கடற் றோன்றலும் வைகிருட்
டொல்லை நல்வினை முற்படத் தோன்றிய
வல்லல் வெவ்வினை போல வகன்றதே.

[அவ்வெல்லையை அடைந்ததும் ஒருவர் நல்வினை அடைந்
ததேபோற் கதிர்தோன்ற, நல்வினைக்கு முன்னே நிற்குந்
தீவினை யழியுமாறு இருள் ஒழிந்தது]

இது காட்டகத்திருந்த சச்சந்தன் மனைவி தோழி
யாக வந்த தெய்வத்தோடும் தண்டகாரண்ய எல்லை
யைப் பொருந்துதலும் தோன்றிய கதிரவனைக்குறித்த
செய்யுளாகும் செய்யுளென்ப. நல்வினை தோன்றத்
தீவினையழியு மென்பது கருத்து.

விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

[மாய்ந்தாங்கு - அழிந்தாற்போல்; "பாவம் இல்லாது"
எனமாற்றுக. "தீதுநிற்கும்" எனவும் மாற்றுக. தீதுஎன்பது
குறிப்பு வினையாலணையும் பெயர்]

நூனெறிவகையி னேக்கிநுண்ணிதி னுழைந்துதீமைப்
பானெறி பலவு நீக்கிப் பரிதியங் கடவு ளன்ன
கோனெறிதழுவி நின்ற குணத்தொடு புணரின்மாதோ
நானெறி வகையினின்ற நல்லுயிர்க் கமிர்தமென்றான்.

[உயர்ந்த நூல்களது வழியில் நின்று நன்மைகளையும்
தீமைகளையும் ஆராய்ந்து தீநெறிகள் பலவற்றையும்
ஒழித்து (பொருள்களின் தன்மைகளை உள்ளவாறே
உணர்தல், நற்காட்சியாகிய ஐயமின்மை, அவாவின்மை,
உவர்ப்பின்மை, மயக்கமின்மை, அறப்பழி நீக்கல், அழிந்
தாரைத் தாங்கல், முதலியவற்றை அறிதலும் நல்லொழுக்க



முடையராதல் முதலிய) சிறந்த குணங்களைப் பொருந்தி
னல் நான்கு வகையாக நின்ற உயிர்க்கு ஆக்கமுண்டாம்]

"பரிதியங் கடவுளன்ன கோன்" என்றது அரு
கனை, "நிறத்தாலும் இருணீக்கத்தாலும் ஞாயிறு
உவமை" என்பர் நச்சினார்க்கினியர். முன் "வெம்புஞ்
சுடரிற் சுடருந் திருமூர்த்தி" எனக் கூறினர் ஆசிரி
யர்.

பொருள்களின் தன்மையை உள்ளவாறே உணர்
தல் என்றதை

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற வாய்மையினுணர்க இக்குறட்குப் பரிமேலழ
கர் செய்த உரை சாலச்சிறந்ததொன்றாகலின் அதனை
ஈண்டுத் தருவல்.

[எப்பொருள்எத்தன்மைத்து ஆயினும்-யாதொருபொருள்
யாதொரியல்பிற்றாய்த் தோன்றினும், அப்பொருள் மெய்ப்
பொருள் காண்பது அறிவு-அத்தோன்றியவாற்றைக் கண்
டொழியாது அப்பொருளின்கணின்று மெய்யாகிய பொரு
ளைக் காண்பதே மெய்யுணர்வாவது]

விரிவுரை:—"பொருடோறும் உலகத்தார் கற்பித்
துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து
நின்ற உண்மையைக் காண்பதென்றவா றாயிற்று.
அஃதாவது கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்த
ரஞ் சேரலிரும்பொறை என்றவழி அரசனென்பதோர்
சாதியும் சேரமானென்பதோர் குடியும் வேழநோக்
கினை யுடையா னென்பதோர் வடிவும், சேயென்பதோர்
இயற்பெயரும் மாந்தரஞ்சேரலிரும்பொறை யென்ப
தோர் சிறப்புப்பெயரும் ஒருபொருளின்கட் கற்பனை
யாகலின், அவ்வாறுணராது, நிலமுதல் உயிரீறாகிய
தத்துவங்களின் றொகுதியென வுணர்ந்து, அவ்ற்றை
நிலமுதலாகத் தத்தங் காரணங்களு ளொடுக்கிக்
கொண்டு சென்றாற் காரணங் காரியங்களிரண்டு
மின்றி முடிவாய் நிற்பதனை யுணர்தலாம். எப்பொரு
ளென்ற பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்
திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறேயுணரப்
படும். இதனுன் மெய்யுணர்வின திலக்கணங் கூறப்
பட்டது." இவ்வுரையையும் "பொருளின் தன்மையை
உள்ளவாறே உணர்தல்" என்றகருத்தையும் ஒப்பிட்டு
ஆய்ந்து தெளிக.

# குலசேகரர்.

## பிறவி வேண்டுந் துறவி.

652 பக்கத் தொடர்ச்சி

இறைவனைவேண்டி இவ்வுலகை இழந்துநிற்கும்
இன்பநிலைக்கு ஏற்றதொரு வழியாம் இயற்கைத்
துறவினை இங்கு எடுத்துரைக்கின்
றார் ஆழ்வார். இவரது துறவறத்
தின் இயற்கைப் பான்மையை இத்
திருமொழியும் இனிது விளக்குகின்
றது. உண்மையாய் உயர்ந்து அதிலொளிர் அறி
வாய்விளங்கி அவ்வறிவினூறும் இன்பவெள்ளமாய்ப்
பொங்கி எங்கும்வழிந்து எல்லாவற்றையும் தன்னுட்
கொண்ட கடவுளை யடைந்தபின், எத்தொழிலும் எளி
தாகின்றது; இனிய அறமாகின்றது. இதற்குமேலும்
எமக்கு வேண்டுவது இவ்வுலகிலேனும் எவ்வுலகிலே
னும் என்றேனும் உண்டோ? இந்நிலையடைந்த பெரி
யோர் இவ்வின்பத்தில் ஈடுபட்டுநின்றபோது பிறவாத
பெரும்பேற்றையும் மறந்து மால்கொண்ட மனத்தவ
ராய்ப் பிறவியே வேண்டிநிற்பர். கற்கண்டே யாகிவிடு
வதிலும், தனியே வேறுநின்று கற்கண்டைச் சுவைப்
பதே பேரின்பம் என்பர். கடவுளாக ஆகிவிடுவதிலும்
கடவுளினும் வேறாகிக் கடவுளின்பத்தைக் கல்லிலும்
கண்டு காதலித்துக் களியேறுவதே கடவுட்பே றென்
பர். இறவாத இன்ப அன்போடு இறைவன் ஆடுந்
திருக்கூத்தை எதிரிருந்து என்றும் கண்டுகொண்
டிருத்தல் வேண்டும் என்று காரைக்காலம்மையார்
வேண்டிநின்று பெற்றதாகச் சேக்கிழார் பாடுகின்றார்.

"மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே"
என்றும்,

"இன்னும் பாலிக்குமோ இப்பிறவியே" என்றும்,
திருநாவுக்கரையர் பாடுகின்றனர். கடவுள் திரு
வடிநீழலில் நின்று அவரது திருக்கூத்தினைக் கண்டு
களிக்கும் அணுக்கத்தொண்டர்களில் ஒருவராக
விளங்காமற்போனாலும், அவரோடு ஏதேனும் ஒரு
தொடர்புண்டானாலும் பெரும்பேறும் எனப் பேசிப்
பிரிவஞ்சி மனம்துடிப்பர். கடவுளைக் கனவிற்கண்டா
லும்களிப்படையலாம். கடவுள்மணப்பட்டாலும் கரு
கிய உயிர் தளிர்க்கும். அவர் நின்றவிடத்தே புகுந்தா
லும் பொலிவுபெறுவோம். கல்லாகவும் புல்லாகவும்
காற்றாகவும் கருவானமாகவும் மாறிப்பிறந்தேனும் கட
வுளோடு தொடர்பு பூண்டால் இன்பமடைவோம். இவ்
வாறு எல்லாம் எண்ணி எண்ணி, அழுது புலம்பி
அன்புருவாகின்றனர் அடியவர். கல்லிற்புகுந்து கண்ட
வர்தம் கருத்தழிக்கும் கண்ணனோடு கலந்தருளிக்
களிப்படையக் கருதுகின்றார் ஆழ்வார். குலசேகரர்
இத்திருமொழியில் கூறியருளியவற்றைக் கருத்திற்
கொண்டு, கரியசெம்மலாம் இராமன்தன் காலடி மண்
வேண்டிக் கருத்தழிந்து கரைந்துருகுகின்ற பிள்ளைப்
பெருமாள் ஐயங்கார்,

புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி
பொன்கொழிக்கும்
அலைபார் திருவரங் கத்தெம் பிரான்நம
தன்னையொடும்
தொலையாத கானங் கடந்தவந் நாள்தடந்
தோறும்புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்தில மேநெஞ்ச மேகழல்
தீண்டுகைக்கே

எனப்பாடுகின்றார்.

காதலன் காதலியின்மேல் கொண்ட கடக்கலாகாக்
கடல்போன்ற காதலால் கசிந்துருகி, அவளைத் தான்
அடையாதபோது 'முல்லைமலராய்ப் பிறந்து அவ
ளது கூந்தலிற்புகுந்து மணம்வீசும் திருவுடையன்
ஆவேனே; பஞ்சாகிப்பிறந்து புடவையாய்மாறி அவ
ளைச் சுற்றிவளைந்து இறுக அணைத்து என் துன்பம்
நீங்குவேன்" என்று காதல்வெறி கொள்ளுகிறான்.

"ஆனால் அழகுமன்னன் அர்ச்சுனனும்ஏதுசொல்வான்
நீர் - என்னதான் சொன்னாலும் என் செவியிலேறாது
மாதந்த கன்னியரை மணமாலை சூட்டினக்கால்
சித்தசன் விகாரமது தெளியுங்காணென்தோழா
நான் - செத்து மடிந்தாலும் செலவழிந்து போனாலும்
மாண்டு மடிந்து வைகுண்டம் போனாலும்
செத்தவிடந்தனிலே செங்கழுநீர் பூ பூப்பேன் [பேன்
குடமல்லியாய்ப் பிறந்து கொண்டையிலே போயிருப்
கொண்டைக்குப் பூவாவேன் கொய்வனத்திற் பையாவேன்
கண்ணுக்கு மையாவேன் காலுக்கு மெட்டாவேன்
நாயகியாள் நெற்றியிலே நற்சாந்துப் பொட்டாவேன்
அவள்-முந்தாணித்தொங்கலிலே பொத்திய முள்ளாவேன்"

என்று அர்ச்சுனன் புலம்புவதாகப் பவளக்கொடி மாலையில் வருவது காண்க.

காதலரைப்போலக் கடவுள்வெறி கொண்டாரும் கடவுளின் திருமலையில் புல்லாயும் மரமாயும் மீனாயும் குருகாயும் நெறியாயும் படியாயும் கிடந்து அவன் பவளவாய் காண விரும்புவர் அன்புடையார் இருந்த இடத்தைக் காண்பதுவும் அன்புடையாரைக் காண்பதே போலாம். கோவைகளில்வரும் "பொழில்கண்டு வியத்தல்" என்றதுறை இதனை இனிது விளக்குகின்றது. கடவுள் இருந்தஇடத்தைக் காண்பதுவும் கடவுளைக் காண்பதேபோலாம். அவ்விடமே யாதல் அவரே யாதல்போலாம். அத்தகையது ஆழ்வாரின் உள்ளத்து உயர்நிலை. அந்நிலையில் கல்லாய்ப் புல்லாய்க் கிடப்பதும்திருநாட்டுப் பெருவாழ்வாகின்றது. அந்நிலை யடையதாபோது அரசசெல்வத்து வீற்றிருப்பதும் எரிவாய்நிரயத்து இடும்பையாகின்றது.

ஆழ்வார் இறைவனிடத்தே எல்லையில்லாத இன்ப அன்புடையார். ஆனால், அவ்விறைவனை மக்களிடத்தே கண்டுகளிப்பவர். ஆதலின் புல்லும் கல்லுமாய்ப் பிறந்து திருமலையிற்புகுந்து வாழ விரும்பியபோதும் உலகினர்க்குப் பயன்படுமாறே விரும்புகின்றனர். கடவுள் நின்ற இடத்தே கல்லாய்நின்று கண்ணனைக் காணக் கருதுவார்;எத்தகைய கல்லாய் இருப்பாரவரெனிலோ பழஅடியார் பலரும் ஏறியிழியும் படியாய்ப் பயன்பட்டே அவனது பவளவாய்க் காண முற்படுவர். எல்லாம் இறைவனைக் காணும்நிலை ஈதேயாகும்.

ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்
ஆனேறே ழடர்த்தான் அடிமைத் திறமல்லால்
கூனேறு சங்க மிடத்தான்றன் வேங்கடத்தே
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே. 1

### உடற்பிறவி

எண்ணிலாத பலகாலம் எண்ணிலாத பல பிறவி எடுத்துஎடுத்து இவ்வுலகில் வாழ்ந்துவருவதெல்லாம் எதன்பொருட்டு? உலகைத் துய்த்துணர்ந்து இயற்கையோடிணைந்த இறைவனை அறிந்து, அவ்வறிவுக்கிசைய உலகத்தோடொட்ட ஒழுகி உயர்நிலை யடையவே யன்றோ, பிறந்தும்இறந்தும் பேரிடர் உறுவது. பறவையாயும் கறவையாயும் மக்களாயும் மாக்களாயும் பலவிடத்தும் பலநிலையிலும் பிறந்து வளர்வதால் நம் மனமும் அறிவும் பலவகையான பயிற்சிபெற்று உயர்நிலை யடைகின்றது. உள்ளத்தின் உயர்நிலைக் கேற்றதோர் உடலம்பெற்று உலகில் பிறந்துவளர்கின்றோம். உடல் வகையால் வேறுபாடு தோன்றினும்,உண்மையில் நோக்குமிடத்து உள்ளத்தின் வேற்றுமையே பலவகை உயிர்த்தோற்றங்களுக்கும் மூலமாகும். எனவே, உள்ளமே உயிர்த்தோற்றந்தோறும் மாறி மாறிப் பிறக்கின்றது. உயிரும் உள்ளமும் மாறாதபோது உடலளவில் மாறிப்பிறந்ததால் உயர்நிலை யடைதல் ஒருபொழுதும் இல்லை; கீழ்நிலை யடைந்தே கேடுறுவோம். எனவே, உயிர்ப்பிறவியே வேண்டற்பாலது. உடற்பிறவி வேண்டற்பாலதன்று.

பிறப்பும் இறப்பும் பெருந் தொல்லையே. ஆனால் வைக்கோற்புரியால் கட்டுண்ட ஆனேறு அப்புரியினைத் தின்றே விடுதலைபெறுதல் வேண்டும். அஃதே போல நாமும் நம் வினையின்பயனைத் துய்த்தே உயர்தல் வேண்டும். பள்ளிச்சிறார்க்குப் படிப்பு வருத்தமாய்த் தோன்றுவதுபோல நமக்கும் இவ்வுலகமாம் பள்ளி பெருஞ் சிறையாக நிற்கின்றது. பள்ளியில் பயின்றால்அன்றிப் பலன்பெறும்வகையில் வாழ்தல் இயலாதன்றே! ஆதலின் பிறவி இவ்வகையில் வேண்டற்பாலதேயாம். ஆனால் அஃது உயிர்ப்பிறவியாய் ஒளிர்தல் வேண்டும். உடற்பிறவி அளவாய் ஒழிதல் ஒண்ணாது! மக்களாய்ப்பிறந்தும் குரங்கெனக் குறும்பு செய்து குதித்தாடுவாரும், புலியெனப் பொங்கி எரிந்துவீழ்வாரும், உடற்பிறவி பெற்றாரேயன்றி உயிர்ப்பிறவி பெற்றார்இல்லை. உடலளவில்தான் மக்கள் என மாறிப் பிறந்துள்ளார்கள். உள்ளநிலையோ குரங்குநிலையிலும் புலிநிலையிலும் ஊன்றிநிற்கின்றது.

### ஊனேறு செல்வம்

அவ்வாறு ஊன்றிநின்றபோது உடலை தாம் என எண்ணி அதனைப் போற்றுவதிலேயே கண்ணும் கருத்துமுடையராகின்றனர். உடலை வளர்ப்பதென்றால் என்ன? ஊனை வளர்ப்பதுதான். ஊனேறு செல்வமொன்றே உடலுக்குச் செல்வமாவது. உள்ளமும் அறிவும் உயிரும் மாறிப்பிறந்து உயர்ந்து வளராதபோது உடலளவில் மாறிப் பிறந்து வணங்காமுடி மன்னனாய் உயரவளர்ந்தால் ஒருபயனும் இல்லை. உடல்கொழுத்தால் ஓடும் நரிகட் கிரையாகலாம்.ஊன் மல்கு மோடு பருப்பவர் தாம்செல்லும் இடத்திற்கெல்லாம் ஊன்பொதிந்த பசுங்குடிலை ஒருபெருஞ் சுமையாகச் சுமந்துசென்று உலகத்திற்கும் தமக்கும் தாமே பெருஞ்சுமையாய் ஒழிவதல்லால் உலகத்திற் கொருநாளும் உதவவாரார்; தமக்கும் உதவுவாராகார்.

### செல்வம் யான்வேண்டேன்

இன்பத்தை நாடிநிற்கும் நாமனைவரும் இன்பத்தில் நம்மைச் செலுத்துவது செல்வமே என எண்ணி அதனைத்தேடி அல்லும்பகலும் உழைக்கின்றோம். அந்நிலையில் இன்பத்தை மறந்து இன்பமே செல்வமென மயங்குகின்றோம். இச்செல்வங்களில், பொருள் முதலியனவோ இவ்வுலகளவுங்கூட எம்மோடு என்றும் இயைந்து வருவதில்லை. ஆனால் ஊனேறு செல்வத்துடலோ உண்மையாம் வாழ்க்கைத்துணையாய் உலகில் உள்ளவரை உடன்வருகின்றது. ஆனால் ஈது நாம் செல்லும்நெறியே அன்றிச் சென்றடையும்முடிவிடம் அன்று. ஈதும், செல்வம் எனப்பெயர் பெற்று நம்மை நீங்கிச் செல்லும் தன்மையது. ஆதலின் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் இலவுகாத்த கிளியாய் ஏமாற்றமடைவோம். உயர்நிலையடைந்து உயிர் வாழ்தலின்பொருட்டே உடலை வளர்த்தல் வேண்டும்; உடலை வளர்த்தற்பொருட்டே உயிர்வாழ்தல் ஒண்ணாது.



### ஆனேறேழ் அடர்த்தான்

உயிரை மறந்து உடலையே உறுதியென எண்ணி, அதனையும் பயன்படுத்திக்கொள்ளாது இழந்து நின்றவர்கள் விலங்கின் வாழ்வே வாழ்ந்தனர் என்று கூறுவதோடு நின்றுவிடுதல் உண்மையுரைத்த லாகாது. விலங்கோ 'தக்க தின்னது தகாத தின்னது' என்று அறிந்து ஒழுகுவதில்லை. ஆதலின் அந்நிலையில்நன்மை தீமை என்ற பேச்சு இல்லை. ஆனால் ஆறறிவு பெற்றும் அறிவைமறந்து அல்லல் படுவோர் அறிவிலாப் பேதையர்அல்லர், அறக்கொடியோரேயாவர்.இவர்களே இராவணன் இரணியன் எனப் பெயர்பெற்றோர். ஊன்பெருத்துநின்று செருக்கித் திரிந்து கொலைவடிவம் கொண்டெழுந்து கண்ணன்மேற் பாய்ந்த ஆனேறு ஏழும் இவர்கள் நிலையை நன்கு உணர்த்துகின்றன அன்பே வடிவான ஆனேறு அனைத்தையும் மேய்த்து வளர்த்த கண்ணன் அவற்றிற்கு உரிஞ்சுகல்லாய் நின்றும் அவற்றின் உடலையும் உயிரையும் வளர்த்தான். வானவர்க்கரசனை வழிபடுவதினும் பாலூட்டிவளர்க்கும் ஆவினத்தை வழிபடுவதே உண்மைவழிபாடெனக் காட்டிக் குன்றமே குடையாகப் பிடித்தான். அன்றுமுதல் ஆவினமே அறக்கடவுளாய் விளங்குகின்றன இந்நாட்டில். ஆனால் உயிர்ப்பிறவி மாறாது உடற்பிறவியொன்றே மாறிஆனென உலவிப் புலியெனப் பாய்ந்த பொல்லாத விலங்குகள் ஏழினையும் அத்தகையவன் அத்தகைய நாட்டில் முசப்புமுறியக் கொன்று குவித்தான். ஆனேறேழையும் அடர்த்ததன் பயன் என்ன? அன்புவடிவாய் உயிர்மாறிப் பிறந்த நப்பின்னையைக் கைப்பிடித்தருளி அவளோடு அன்புருவாய்க் கலந்தருளினான். அவ்வருளன்னையும் உயர்நிலையிலோங்கி யுயர்ந்து உயிர்த்தலைவனோடு ஒன்றாயினாள். பகையும் தலை சாய்ந்தது. அன்புகொண்டு அடிமைபூண்டதும் அவனே மேல்விழுந்து கைப்பிடித்தருளுவான்: பகையையும் கெடுப்பான்.

### கூனேறுசங்க மிடத்தான்

ஊனேறு செல்வத்தோரேழு ஆனேறும், கூனேறு திமிலோடு பொலிந்தன அன்றே? அக்கூனேறு திமிலன்றே முரிந்து வீழ்ந்தன. "பொய்சினக் குரலேற்றெருத்த மிறுத்தும் போராவீர்த்த கோனன்றே" கண்ணன். உயிர்மாறிப் பிறவாது உடல்மாறிப்பிறந்த கூனேறு எருத்தமுடைய ஆனேறு, அழிந்தொழிய, உடல்மாறிப் பிறவாது உயிர்மாறிப்பிறந்த கூனேறு சங்கமோ குன்றாத நிலையடைந்தது. நிலைத்திணைப் பொருள்களில் புல் மரம் முதலியன ஓரறிவுயிரோடு ஒளிர்கின்றன. இயங்குதிணைப் பொருள்களில் கடைநிலையில் உள்ளது இந் நந்தேயாகும்

புல்மரம் முதல உற்றறியு மோரறிவுயிர்.
முரண் நந்தாதி நாவறிவோ டீரறிவுயிர்

எனவருதல் காண்க. ஊனேறு செல்வத்தை ஒரு பொருளாகக் கருதாது, ஊனை உதறிநின்று உழைக்க முன்வந்தது; அவ்வுள்ளத்துறுதி எழுந்ததும் கூனுடைய நந்தும் அவன் கழுத்தென அழகாகி நின்றது. என் செய்தான் இறைவன் ? நப்பின்னையைத் தழுவியணைக்கும் கையால் அதனையும் தழுவியணைத்தான். தனியே மேலுயர்த்தி விளக்கினான். இடதுகையில் என்றும் பிடித்திருப்பான் ஆதலின் வாடா இளமையும் பெருமையும் பெற்று அஃது இனிய நிலை யடைந்தது. "பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார். அவன் செவியில் மந்திரங் கொள்வாயே போலும். செங்கண்மால் தன்னுடைய வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய்! உன்னோடுடனே ஒரு கடலில் வாழ்வாரை இன்னார் இனையர் என்று எண்ணுவார் இல்லை" என்றெல்லாம் அடியார் புகழ நின்றதன்றே! ஊனேறு செல்வத் துடற்பிறவி வேண்டாது அன்பேறு செல்வத்து அறிவுப்பிறவி பெற்றபோது நாம் பெண்ணேயாயினும் நந்தேயாயினும் நம்மேல் விழுந்து நம் கைப்பிடித்து நம்முடன் கலந்து நமக்கு இன்பப் பெருநிலையளிப்பான்.

### குருகு

அத்தகைய அறிவுப்பிறவி பெற்றால் மக்கள்வடிவமொன்றே வேண்டுமென்பதில்லை. கூனேறு சங்கம் போலக் குளிர்ந்ததொரு வெண்ணிய குருகாய்ப் பிறந்தாலும் பெருமையே அடைவோம். வெள்ளை வெளுத்த கள்ளமிலா உள்ளமும்,

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

என்றபடி, கண்ணும் கருத்துமாய்க் கருதியதைக் கைக்கொள்ளும் ஊக்கமும் உறுதியும் நீர்மையொடு தண்மையும் நிறைந்த இடத்தே நின்றநிலையும், குருகாய் (அன்னம்) இருந்தே நம் கோமான் மறைப்பொருளைக் கூறியருளிய பெருமையும், குருகை நினைத்தவுடன் நம்மனத்தே எழுகின்றன வன்றே ?

### பிறப்பேனே

"உடற் பிறவி வேண்டேன் ; குருகாய்ப் பிறப்பேன்" எனப் பாடுகின்றேன். இதிலொரு முரண்பாடும் இல்லை. குருகாய்ப் பிறப்பது பிறவியன்று. கோனேரி வாழும் குறைவிலா வாழ்க்கையாகும். அறிவுவடிவமான திருநாடாம் மாவுலகில் அருள்வடிவான திருவாற்றில் (விரஜாநதி) வாழும் இன்ப வாழ்க்கையே யாகும்.

### வேங்கடம்

குன்றக் குறவர்க்கும் குளிர்முகங் காட்டக் குன்றிட்ட விளக்காய் நின்றான் இறைவன். அவன் மலையில் அவனுகக்கும் கோனேரியில் வாழ்வது அவனோடு வாழ்வதன்றோ? அவனொடும் நீரிலன்றோ ஆடுகின்றோம். அவன் அடிதோய்ந்த மண்ணிலூறும் நீரன்றோ அந்நீர். அவனுயிர்க்கும் காற்றன்றோ அங்கு உலவுகின்றது. இக்காற்றும், இந்நீரும் இம்மலையும் அல்லாது இன்ப உலகென வேறொன்று உண்டோ? இந்நீரையும் காற்றையும் மலையினையும் துய்க்க அவற்றிற் கேற்ற ஒரு குருகாய்ப் பிறத்தலும் பெரும் பேறேயாம். ஆனால் உள்ளம் மாறுதலொன்றே வேண்டுவது.

### அடிமைத்திறம்

இறைவன் உடலாய உலகத்தோடு ஒட்டஒழுகி ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வாழ்தலே அடிமைத் திறமாகும். உணர்வு பெருக்கெடுத்தோடும் இயற்கைவழி ஈதே யாகும் இவ்வழி செல்லாது அல்வழியில், நம் உடற்பொறையை ஊடே தடையாய் எறிந்து வழிமறித்து இறைவன் வடிவான இயற்கைக்கு மாறுசெல்வது அழகோ? அடிமைத்திறம் என்றால் அடிமைத்திறனும் ஆம்.இவ்வாறு உயிர்மாறிப் பிறந்தாரோடு குருகாய்க் கூடிக் குலாவினும் குறைவிலா நிறைவாம் இன்பம் பெறலாமே.

# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்.

### இராசசூயச் சருக்கம்.

**பா**ண்டவ கௌரவர்களது பிறப்புவளர்ப்பையும், அவருள் முற்பட்டார் வீரச் செய்கைகளையும், அவர் சின்னாட்கடந்து வேத்திரகீயத் திலுறைந்து பின் துருபதன்மகளை மணந்தது முதலான வரலாறுகளையும், இதுகாறும் முறைபாக எட்டுச்

633 பக்கத் தொடர்ச்சி

சருக்கங்களால் கூறிப்போந்த வாசிரியர், இந்திரப்பிரத்தத்தி லவர்கள் நிலையாயூன்றி வாழுநாளில் நடந்த காண்டவதகனத்தோடு முதற்பருவத்தை முடித்தார். இனி இரண்டாவதாகச் சபாபருவத்தைப் பாடத் தொடங்கினார். இப்பருவத்தி லிந்திரப்பிரத்தத்தில் மயனாலமைக்கப்பட்ட சபாமண்டபத்திலும், துரியோதனன் முதலோர் அத்தினபுரியிலமைத்த சபாமண்டபத்திலும் நடந்தசெய்திகள் கூறப்படுகின்றனவாதலால் இது சபாபருவமெனப் பெயர் பெற்றது. இந்திரப் பிரத்தத்தில் நடந்த காரியம் இராசசூய யாகமாம். அத்தினபுரியில் நடந்த விடயம் கவறாடல். இவ்விரண்டுமே இப்பருவத்திற்சொல்லப்படுகின்றன. இராஜசூயமென்ற யாகம் அரசனால் சோமக்கொடியைப் பிழிந்து செய்யப்பட்டதென்றும், இராஜாவென்னும் சோமக்கொடி நெறுக்கப்படுகிறதென்றும் பொருள்படும்.

வில்லிபுத்தூரார் தனது வழக்கம்போ லிச்சருக்கத்தின் முதலில், தான் மேற்கொண்ட காரிய மிடையூறின்றி யினிது முடியும்வண்ணம், இவ்வமயத்தி லேற்புடைக் கடவுளாகிய கிருஷ்ணனையே வணக்கஞ் செய்கின்றார். நூலின் தொடக்கத்திற் கூறிய கடவுள் வணக்கம் போதாதோ வெனின், நூலொன்றேயாயினும் சருக்கங்கள்யாவும் பொருளால் வேறுபாடுடையன வாதலாலும், அக்காலத்து வழக்கப்படி நூலின் முத லிடை கடைகளில் வாழ்த்துக்கூறல் மங்கலமெனக் கருதப்பட்டதாதலாலும் கவி யவ்வாறு கூறினாரெனக் கொள்ளக்கிடக்கின்றது.

வியனும்பர் பலகணமுஞ் சுரபதியுஞ்
  சென்றெழில்கொள் விசும்பின் மேவ
நயனங்கள் முதலான வைம்புலனும்
  மனமும்போ னகரி யெய்திப்
பயன்மிஞ்சு தொழிலினராய்ப் பாண்டவருந்
  திருமாலும் பயிலும் வேலை
மயனென்பான் வாய்புதைத்து வலம்படவந்
  தொருமாற்றம் விளம்பி னானே.

[பெருமைதங்கிய வானோர் கூட்டமும், வானவர்க் கிறையாகிய இந்திரனும் சென்று அழகுகொண்ட சுவர்க்கவுலகத்திற் சேர, கண்முதலிய ஐம்புலன்களும் அவற்றையவ் வழிச் செலுத்துகிற மனமும்போல் ஒற்றுமைகொண்டு, நற்பயன் மிக்க செயலினராய் அப்பாண்டவருந் திருமாலும் நகரத்தை அடைந்துகூடியிருக்குங்காலத்து, மயனென்பவன் வாய்புதைத்துச் சிறப்பாக ஒரு வார்த்தையைச் சொன்னான்]

காண்டவவன மெரியுங்காலத்து, கருமுகில் வண்ணன் கைக்கொண்ட திகிரியால் காலனையடையவிருந்த மயன், பின்ன ரவர் கருணையா லுயிர்பிழைத்தனால், தன் நன்றியைக் காட்டுமமயம் வாய்த்ததென, ஐவரும் அரியோடமர்ந்திருந்த வமயத்தி லவரிடை வந்து சேர்ந்தான். அங்ஙனமமர்ந்திருந்த திவ்வாறென இரண்டாமூன்று மடிகளி லாசிரியர் தெரிவிக்கின்றார்.

பாண்டவ ரைவருந் திருமாலும் ஐம்புலன்களும் மனமும்போல் பயன்விஞ்சு தொழில்கள் பலவற்றைப் பயின்று இந்திரப்பிரத்தத்தி லமர்ந்திருந்தார்கள். பொறிக ளைந்தையும் அவ்வவற்றிற்குரிய இந்திரியவுணர்ச்சிகொண்டு விடயங்களிற் செல்லும்படி செய்வது மனமாதலால், செய்யவேண்டிய கருமங்களையுய்த்துணர்ந்து இவ் வைவரையு மக்கருமங்களைச் செவ்வனே செய்யவைத்த திருமால், மனதிற்கொப்பிடப்பட்டார். மற்றும், மனதின் விருப்பிற்கேற்ப வைம்பொறிகளு மியங்குமாதலால், அந்தப்பாண்டவர்கள் ஐவரும் திருமாலி னவதாரமாகிய கிருஷ்ணன் சொற்படியே யவர்கட்டளையைக் கடவாமல் நடந்தார்களென்றவ் விருதிறத்தார்க்கு ளிருந்த வொற்றுமையையும் கவி இவ்வுவமைவாயிலாகத் தெரிவித்தார். அன்றியும் ஐம்பொறிகளும் மனமும் உயிர்கொண்ட ஓர் உருவத்திற்கே யுரியன. பாண்டுவின் மைந்தரைவரையும், கிருஷ்ணனையும், உயிர்கொண்ட வொரே உடலிற்குரிய அனுகரணங்களுக் குவமைகூறியது அவ்வறுவருடைய ஒற்றுமையையும் தோற்றுவித்தது. கிருஷ்ணன் கீதையை யுபதேசித்த காலத்தில், "மயாததமிதம் ஸர்வம் ஜகத் அவ்யக்த மூர்த்தினா" என்று, அந்தர்யாமியாய் நிற்கும் என்னால் இவ்வுலகமுழுவதும் வியாபிக்கப்பட் டிருக்கின்றதென்று கூறுவதால், உள்நின் றியக்கும் கடவுளுக்கு அகத்துறுப்பாகிய மனமும், அக்கண்ணன் வழிநின்று தம்முள் மாறுபடாமல் ஒழுகும் பாண்டவரைவருக்கும் புறத்துறுப்புக்களாகிய ஐம்பொறிகளு முவமை கூறப்பட்டது மிகவும் பொருத்தமுடையதா யிருத்தல்கண்டு களிக்காதா ரெவர்?

'மத்ஸ்தானி ஸர்வ பூதானி நச அஹம் தேஷு அவஸ்திதக்'-'எல்லாவுயிர்களும் என்னிடம் நிலைக்கப்பெற்றிருக்கின்றன; நான் அவைகளில் நிலைபெற்றிருப்பதில்லை'-எனவே கடவுள் எல்லாவுயிர்களிலிருந்தும் அவைகளின் கருமங்களி லகப்பட்டுச் சுழலாமற் புறம்பே நிற்றலால், ஐவர் மனங்களில் நின்று ஆட்டுவித்து அவ்வைவரையும் தன்னையே வணங்கும்படி செய்து நின்றார் கண்ணன். என்?
கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

தெய்வத்தி னிணையடிகளிற் றாழாத தலை, யென்ன தலையோ? கடவுளின் கருணை யுருவத்தைக் காணாத கண் ணென்ன கண்ணோ? அன்னவர் அருட்பெருங் குணங்களை வாழ்த்தாத நா வென்ன நாவோ? சேய்மைக்கண்ணு மணித்தாயும் நிற்கும் செவ்வியோன் செயல்களைக் கேளாத செவி யென்னசெவியோ? ஆதலால் ஐம்புலன்களின் தொழில் அவற்றை ஆக்கியோனைக்கண்டு அவன்வழி நின்று அவனடியிணையிற் றெண்டுபூண் டொழுகலே யாதலால், இவ்வைவரையும் தன் வழிபாட்டிற் குட்படுத்தித் தானே தனிப்பெருங் கடவுளாய்ப் புறத்தி னின்றானென்பது மிவ்வுவமையாற் பெறப்படுகின்றது



'நயனங்கண் முதலானவைம்புலனு'மென்றுகண்ணை முதலாகவைத்துக்கூறியது அதன் பெருமைதோன்ற; 'ஸர்வேந்திரியாணாம் நயநம் ப்ரதாநம்' என்பது ஆரியர்கூற்று. அது, ஐவர்களுள் முதலான தருமபுத்திரனைக் காட்டிநிற்கிறது. நயனமும் மனமு மொருவழி நின்றாலன்றி நற்காரியங்கள் நடைபெறுவாதலால், அவ்வறுவரு மொன்றுபட்டு நின்றதன் பயனைப் பல நற்காரியங்களை நிகழ்த்தி, அறன்வழி பிறழாமல் அரசர்க்கடனை யிறுத்தார்கள் அவரைவரு மென்பது பொருள்.

அவரிடைவந்த மயன்,'உம்மாலின் றுயிர்பிழைத்தேனாதலால் என்போன்றார் உமக்குச் செய்யும் கைம்மாறி யாதுளது? சிற்பம்வல்லோ ரனைவரு மம்மாவென் றதிசயிக்கத்தக்கபடி நான் உமக்கொரு மண்டபமமைத்துத் தருவேன் அதை யான் சமைக்கும்படி பணித்தருளல் வேண்டு'மென இரந்தான். அவரும் அங்ஙனமே விடைதந்தார்.

மீதடுக்கிப் பசும்பொன்னாற் சுவர்செய்து
  மரகதத்தூண் வீதி போக்கி
யோதிடத்திற் சுருங்காமற் செழுந்துகிருத்
  தரம்பரப்பி யுலகோ ரேழு
மாதிடத்தான் வைகுதற்கு வாய்க்குமதோ
  விதுவென்ன வரம்பில் கேள்விச்
சோதிடத்தோர் நாளுரைப்பச் சுதன்மையினு
  முதன்மைபெறத் தொடங் கினானே.

[பசும் பொன்னாலான கற்களை யொன்றின்மே லொன்றாயடுக்கி, பொன்னாலேயே சுவரெழுப்பி, பச்சை இரத்தினத்தாலான தூண்களை ஒழுங்குபட நிறுத்தி, சிற்பநூலிற்கூறிய இடத்தினளவு சுருங்காமல் பவளத்தால் உத்தரத்துண்டுகளைப் பரப்பி, எழுலகத்திலுள்ளோரெல்லாம், இம்மண்டபம் உமையைத் தன்னிடத்தில் வைத்த சிவன் வீற்றிருக்கத் தக்கவாறு செய்யப்பட்டதோவென வியக்கும்படி எல்லையில்லாத நூற்கேள்வியையுடைய சோதிடம் வல்லோர் நாள் குறித்துச்சொல்ல, சுதர்மையென்கிறஇந்திரசபையைவிடச் சிறப்பாகச் செய்யத் தொடங்கினான்]

நமது கவிகளின் மனோபாவம் சென்ற வழியென்னே. மானிட ரைவர் வதிந்துறையக் கட்டிய மண்டபம் பொன்னாற் சுவர்செய்யப்பட்டு, பச்சைக்கற் றூண்கள் நிறுத்தப்பெற்று, பவளத்தா லுத்தரம் பரப்பப்பெற்றிருந்ததாம். பொற்றகடுக ளடித்துப் பச்சைக் கல்லிழைத்துப் பவளம் பொதியப்பெற் றிருந்திருக்கலாம். ஆயினும் இவையாவு முயர்வுநவிற்சி யணிகளெனவே கொள்ளல்வேண்டும். கம்ப ரிவ்விஷயத்தி லதிகமாய்த் தன் கையைக் காட்டுவார்.

அயோத்தியின் கோபுரவாயிற் சிறப்புக் கூறவந்தவிடத்தில், நான்குகோபுரமும் நல்லவழியைச் சொல்லும் வேதமென நின்றவென்று கூறிப் பின்,

கல்லடித் தடுக்கிவாய் பளிங்கரிந்து கட்டிமீ
தெல்லிடப்பசும் பொன்வைத்திலங்கு பன்மணிக்கலம்
வில்லிடக் குயிற்றுவான் விரிக்கும்வெள் ளிமாமரம்
புல்லிடக் கிடத்திவச் சிரத்தகால் பொருத்தியே.

[கற்களைச் செம்மைசெய்து அடுக்கி, பளிங்குக்கற்களைச் சிறுக அறுத்து அக்கற்களின் வாயில் வைத்துக் கட்டி, அதன்மேல் ஒளிவீசும்படி பசும் பொன்னாற் சுவர்வைத்து விளக்கமுடைய பல மணிக்கூடங்களை ஒளி வீசும்படிச் சுவரிலிழைத்து, ஒளிவீசும் வெள்ளியாலான உத்தரங்களைப் பொருந்தும்படிகிடத்தி வச்சிரங்களாலாகிய நிலைக்கால்களை நாட்டி, அந்நிலைக்கால்களின்மேல் மரகதத்தாலாகிய சுவர் தாங்கும் போதிகைக் கட்டைகளைவைத்து, இப்போதிகைக்குமேல் வச்சிரக்கற்களைப் பழுதில்லாமலடுக்கிப் பொன் கொண்டிழைத்து]

என்று இவ்வாறு மூன்று செய்யுள்களில் நம் மனதினால் கொள்ளப்படாதபடி ஒரு நிலைமாடத்தைக் கட்டுகிறார். பின் அவ்வாறு எழுநிலை மாடங்களமைந்தவாயுள்ளனவக் கோபுரங்க ளென்கிறார். ஆயினும் அவரிலங்கையை வருணிக்குமிடம் சற்றே மனதைக் கவரும் வனப்புவாய்ந்த தாயிருக்கிறது

பொன் கொண்டிழைத்து மணியைக் கொடுபொதிந்த
மின்கொண் டமைத்து வெயிலைக்கொடு சமைத்த
லென்கொண் டியற்றிய வெனத்தெரி கிலாத
வன்கொண் டல்விட்டுமதி முட்டுவன மாடம்

189069

இரண்டா மடியில் மஞ்சள்நிறப் பொன்னுக் குவமையாக மின்னலையும், செம்மைநிற மணிக்குவமையாக விளவெயிலையும் காட்டியுள்ளது நமக்கு மகிழ்ச்சியை விளைவிக்கின்றதன்றோ? சுதர்மாவென்பது நல்ல தருமங்கள் தன்னிடத்து நிகழப்பெறும் தேவசபைக்குப் பெயராகும். 'மாதிடத்தான்வைகுதற்கு வாய்க்குமதோ இது'வென்பதற்குச் சிவபிரான் வீற்றிருப்பதற்குக் கிடைக்குமோவிது என்று உலகத்தார் வியந்து கூறியதாகவும் கொள்ளலாம். அன்றி மா + திடத்தான் என்று பிரித்து மிகுந்த உறுதியுள்ள யுதிஷ்டிரன் வீற்றிருப்பதற்கு வாய்த்த இடமோ இது வென்ன வுலகிலுள்ளார் கொண்டாட என்று உரைத்தலும்கூடும். வரம்பில் கல்விச் சோதிடர் என்னாமல் கேள்விச் சோதிடர் என்றது கற்றலிற் கேட்டலே நன்றென்ற வுறுதிபற்றி யாம். கேள்வி, கற்றோர்க்கும் கல்லார்க்கும் உதவும். கற்றவழி அதனாலாகிய அறிவை வலிவுறுத்தியும், கல்லாதவழி அவ்வறிவை யுண்டாக்கியும் சிறப்புச் செய்தலால் கேள்விச் சோதிடரென்று மேன்மைப்படுத்திக் கூறப்பட்டது. வரம்பில்லாத கேள்வியை யுடையவர், கற்றவரைவிட நூலறிவு நிறையப் பெற்றாரென்ப துண்மையே? காலக்ஷேபங்களிற் சொல்லப்படும் விஷயங்களையும், பிரசங்களிற் சொல்லப்படும் விஷயங்களையும் கேட்டவர்கள் கற்றுணர்ந்தோரைவிட மிகவுமுறுதியாய்ப் பேசுதலை நாம் கண்டதில்லையோ?


**நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.**

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ள தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

# தமிழ்ப் பாடம் 86.

## [ அஷ்ட பிரபந்தம். ]

[ 648-வது பக்கத் தொடர்ச்சி ]

### திருவரங்கத்துமாலை.

திருவேங்கடமாலையில் இருபது செய்யுள்கள் கற்றோம். இனி, பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடிய அஷ்டபிரபந்தத்தில் மற்றோர் நூலாகிய திருவரங்கத்து மாலையிற் சில செய்யுள்கள் கற்போம்.

இதுவும் ஒரு மாலைநூல். மாலை என்பது இன்னதென முன் (வால்யூம் 2. பக்கம் 511) சொல்லியிருக்கிறோம். திருவேங்கடமாலையைப்போல் திருவரங்கத்துமாலையும் திருமாலின் புகழைப் பலவாறுகப் பாடுகின்றது. திருவேங்கடமலையின் வளப்பம் அமைப்பு அழகு முதலியவற்றைப் பலவகைகளில் அணிந்துரைத்துப் பிறகு திருமாலினது பெருமை கருணை அவர் பற்பல அவதாரங்களிற் புரிந்த செய்கைகள் முதலியவற்றை எடுத்தோதி, அப்படிப்பட்ட வேங்கடமலையே இப்படிப்பட்ட திருமால் தங்குமிடம் என்று இரண்டையும் சேர்ப்பது திருவேங்கடமாலைச் செய்யுள்களின் அமைப்பு. திருவரங்கத்துமாலைச் செய்யுள்களில், ஸ்ரீரங்கநாதரே சகலலோகநாயகரென்றும், அவர் எடுத்த அவதாரங்களின் சிறப்பையும் அவரது கல்யாணகுண விசேஷங்களையும் புகழ்ந்து பாடுகின்றார் கவி.

இருகூல மும்பொரு மாநீ ரரங்கத்தி லெந்தையந்தண்
முருகூர் கமல முனியாய் வகுக்கு முறைமையினற்
புருகூ தனுக்குத் திருத்தம்பி யாகிப் புரக்குமுமை
யொருகூறு கொண்ட வரனு யழிக்கு முகாந்தத்திலே.

பதப்பிரிவு:—இரு கூலமும் பொரும் மா நீர் அரங்கத்தில் எந்தை அம் தண் முருகு ஊர் கமலம் முனி ஆய் வகுக்கும் முறைமையினல் புருகூதனுக்கு திரு தம்பி ஆகி புரக்கும் உமை ஒரு கூறு கொண்ட அரன் ஆய் அழிக்கும் உகம் அந்தத்திலே.

பதவுரை.

இரு - இரண்டு, கூலமும் - கரைகளையும், பொரும்- மோதுகின்ற, மா - மிகுந்த, நீர் - காவேரிநீர் சூழ்ந்த, அரங்கத்தில் - திருவரங்கத்திலுள்ள, எந்தை - எம்பெருமான்,

அம் - அழகிய, தண் - குளிர்ச்சிபொருந்திய, முருகு - வாசனை, ஊர் - கமழும், கமலம் - தாமரையிலுள்ள, முனி ஆய் - பிரம்மனாகி, வகுக்கும் - இப்பரபஞ்சத்தைச் சிருஷ்டி செய்வான்; (பிறகு)

புருகூதனுக்கு - இந்திரனுக்கு, திரு - சிறந்த, தம்பி ஆகி - தம்பி என்னும் உபேந்திரனாகி, முறமையினல்- தக்க முறைப்படி, புரக்கும் - (இப்பிரபஞ்சத்தை) காத்தருள்வான்; (பின்)

உலகம் - யுகத்தின், அந்தத்தில் - முடிவில், உமை- பார்வதிதேவியை, ஒரு - ஒரு, கூறு - பாகமாக, கொண்ட - வைத்திருக்கின்ற, அரன் ஆய் - பரமசிவனாய், அழிக்கும் - அழித்து விடுவான்.

**விரிவுரை:**—ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் அப்பெருமான்தான் பிரம்மனாகிப் படைப்பதும், உபேந்திரனாகிக் காப்பதும், சிவனாகி அழிப்பதும் ஆகிய முத்தொழில்களையும் புரிகின்றான் என்பது இச்செய்யுளின் கருத்து. ஆகையால் இம்மூபெரும் தேவரும் வேறுவேறான கடவுளர் அலர் என்பதுதான் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரினுடைய கொள்கையும் ஆகின்றது. எனவே, முன் திருவேங்கடமாலையில், "ஈசனுக்கு வாய்க்க நஞ்சு வைந்தான்," என்று பரமசிவனைப் பழிப்பதுபோல் தோன்றும் பல இடங்கள் அஷ்டபிரபந்தத்தில் இருந்தபோதிலும், வாஸ்தவத்தில் அவை துவேஷ சிந்தனையோடு இப்புலவர் பிற தெய்வங்களைப் பழிக்கின்ற புன்சொற்கள் என்று எண்ண நியாயமில்லை. இப்பரம பக்தர் தான் ஆராதனை செய்யும் மூர்த்தியினிடத்தில் கொண்டவோர் ஆர்வத்தையே அத்தகைய மொழிகள் காட்டுவனவாகக் கொள்ளல்வேண்டும்.

திருமால், தேவேந்திரனது வேண்டுகோளுக்கிணங்கிக் காசியபருக்கும் அவர் மனைவிக்கும் மகனென அவதரித்து, உபேந்திரன் என்னும் திருநாமத்தோடே இந்திரனுக்குத் தம்பியாகி அவனருகிலிருந்து சகல லோகங்களையும் காத்தளிக்கின்றார் எனப் புராணங்கள் கூறும்.

சின்னூல் பலபல வாயா லிழைத்துச் சிலம்பிபின்னு
மந்நூ லருந்தி விடுவது போல வரங்கரண்டம்
பன்னூறு கோடி படைத்தவை யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர் போத மனமகிழ்ந்தே.

பதப்பிரிவு :—சில் நூல் பல பல வாயால் இழைத்து சிலம்பி பின்னும் அ நூல் அருந்தி விடுவது போல அரங்கர் அண்டம் பல் நூறு கோடி படைத்து அவை யாவும் பழம்படியே மன் ஊழி தன்னில் விழுங்குவர் போத மனம் மகிழ்ந்து ஏ.

பதவுரை

சிலம்பி - சிலந்திப் பூச்சியானது, பலபல - அநேகம், சில் - மெல்லிய, நூல் - நூல்களை, வாயால் - தன்னுடைய வாயினுல், இழைத்து - திரித்து, பின்னும் - மறுபடியும், அ - அந்த, நூல் - நூலை, அருந்தி விடுவதுபோல - தானே விழுங்கி விடுவதைப்போல்; அரங்கர் - ஸ்ரீரங்கநாதர்,

பல்நூறு - பலநூறு, கோடி - கோடிக்கணக்கான, அண்டம் - அண்டங்களை, படைத்து - சிருஷ்டித்து, அவையாவும் - அவைகள் அனைத்தையும், பழம்படியே - முன்போல, மன் ஊழிதன்னில் - பெரிய பிரளயகாலத்தில், போத - மிகவும், மனம் - தன் மனமானது, மகிழ்ந்து - உற்சாகங்கொண்டு, விழுங்குவர் = விழுங்கி விடுவார்.

விரிவுரை :—ஜீவசாஸ்திரம் (Zoology) படித்தவர்களைக் கேட்டால், சிலந்தி தான் இழைத்த நூலை மறுபடி விழுங்குவதில்லை என்றும், விழுங்குவதுபோல் தோன்றினுலும் அது வாஸ்தவத்தில் அந்நூலைத் தன் கால்களிலேதான் சுற்றிக்கொள்கின்றது என்றும் சொல்லுவார்கள். அது எப்படி இருந்தபோதிலும் பார்வைக்கு விழுங்குவதுபோல் தோன்றுவதால் இவ்வுவமை தக்கதாகின்றது.

குறிப்பு:—மன் + ஊழி - மன்னூழி, என்று நிலைமொழியீற்று னகரமெய் தனிக்குறிலோடு நிற்பதால் விரிந்து வருமொழிமுதல் உயிரை ஏற்றது.



பந்திக் கமலத் தடஞ்சூ ழரங்கர் படைப்பழிப்புச்
சிந்தித் திடுவது மில்லைகண் டீரத் திசைமுகனே
டுந்திக் கமலம் விரிந்தால் விரியு முகக்கடையில்
முந்திக் குவியி லுடனே குவியுமிம் மூதண்டமே. 3.

பதப்பிரிவு :—பந்தி கமலம் தடம் சூழ் அரங்கர் படைப்பு அழிப்பு சிந்தித்து இடுவதும் இல்லைகண்டீர் அ திசைமுகனேடு உந்தி கமலம் விரிந்தால் விரியும் உகம் கடையில் முந்தி குவியில் உடனே குவியும் இ முது அண்டம் ஏ.

பதவுரை

பந்தி-வரிசையாக,கமலம்-தாமரை மலர்களையுடைய, தடம் - குளங்கள், சூழ் - சூழ்ந்த, அரங்கர் - ஸ்ரீரங்கத்தில் இருக்கும் எம்பெருமான், படைப்பு-படைப்பதைப்பற்றியும், அழிப்பு-அழிப்பதைப்பற்றியும், சிந்தித்திடுவதும் - மனத்தினுல் நினைப்பதுகூட, இல்லை - இல்லை , கண்டீர் - அறிவீராக. (பின், இவை எவ்வாறு நிகழ்கின்றன எனின்)

அ - அந்த, திசை முகனேடு - பிரம்மாவினுடன், உந்தி - திருமாலினது நாபியாகிய, கமலம் - தாமரை, விருந்தால் - மலர்ந்தால், இ - இந்த, முது - பழமையான, அண்டம் - அண்டங்கள், விரியும் - தாமாகவே தோன்றலாகும். உகம் - யுகத்தினது, கடையில் - முடிவில், முந்தி - முன்போல, குவியின் - அவ்வுந்தித் தாமரை பிரம்மாவுடன் குவியுமானுல், உடனே - அப்பொழுதே, குவியும் - இவ்வண்டங்கள் தாமாகவே ஒடுங்கிவிடும்.

விரிவுரை:—படைப்பு அழிப்புத்தொழில்கள் பரமனுக்குப் பெருங்காரியங்கள் அல்லவென்பது இச்செய்யுளின் கருத்து. இவைகளைச் செய்யவேண்டும் என்று அவர் மனத்தினுல் நினைக்கின்ற அளவு சிரமங்கூட எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அவர் திருநாபிக்கமலம் விரியவுங் குவியவும் இவ்வண்டங்களுந் தாமே தோன்றி மறைகின்றன. இவ்வதிசயத்தைக் காணுங்கள் என்று கவி நம்மை அழைத்துக் காட்டுகின்றார்.

ஒருரு வெற்பைத் தரித்தது தானவ ரும்பருள்ளாய்
ஈருரு நின்று கடைந்தது வேலை யிதனிடையோர்
பேருரு வின்னமுதோடே பிறந்தது பெண்மைகொண்
நாருரு நின்ற தரங்கா விதுவென்ன நற்றவமே[டோர்

பதப்பிரிவு: —ஓர் உரு வெற்பை தரித்தது தானவர் உம்பர் உள் ஆய் ஈர் உரு நின்று கடைந்தது வேலை இதன் இடை ஓர் பேர் உரு இன் அமுதோடே பிறந்தது பெண்மை கொண்டு ஓர் நார் உரு நின்றது அரங்கா இது என்ன நல் தவமே.

பதவுரை.

அரங்கா - திருவரங்கநாதனே, (பாற்கடல் கடைந்தபோது) ஓர் உரு - உன்னுடை வடிவமொன்று, வெற்மை - மந்தரமலையை, தரித்தது - ஆமையாகத் தாங்கியது; தானவர் - அசுரர்களுக்கும், உம்பர் - தேவர்களுக்கும், உள் ஆய் - நடுவே, ஈர் உரு - உனது இரண்டு உருவங்கள், நின்று - நின்று, வேலை .. அக்கடலை, கடைந்தது - கடையலாயின. இதன்இடை - இதற்கிடையிலே, ஓர் - ஒரு, பேர் - பெரிய, உரு - உருவம் ஒன்று, இன் - இனிய, அமுதோடே - அமிர்தத்துடன், பிறந்தது - அப்பாற் கடலினின்று தன்வந்திரியாகத் தோன்றியது. (பிறகு) பெண்மை கொண்டு - பெண் ஆகி, ஓர் - ஒரு, நார் - விரும்பத்தக்க, உரு - மோகினிவடிவம் ஒன்று, நின்றது - நிற்கலாயிற்று. இது - இவ்வாறு பலவுருங்கள் எடுத்து நீ அருள்செய்தது, என்ன - என்ன, நல் - நல்ல, தவமே - தவத்தின் பயனே!

விரிவுரை:—திருமால் ஒருவரே பல வடிவங்கள் கொண்டு பாற்கடலைக்கடைந்து அமரர்களுக்கு அமிர்தம் அளித்தபெருமையை இச்செய்யுள் எடுத்துக் கூறுகின்றது.

குறிப்பு:—நளவெண்பாவும், திருவேங்கடமாலையும் வெண்பா என்னும் செய்யுள்களால் அமைந்தன. இத்திருவரங்கத்துமாலைக் கட்டளைக் கலித்துரை என்னும் பாஇனத்துச் செய்யுள்களால் ஆனவை. இதனில் ஒவ்வொரு செய்யுளினும், ஒவ்வொரு அடியினும் உள்ள உயிரெழுத்துக்களையும் உயிர்மெய்யெழுத்துக்களையும் மாத்திரம் எண்ணினுல் பதினறு எழுத்துச் சிலசெய்யுள்களினும், பதினேழு எழுத்துச் சில செய்யுள்களினும் இருக்கக் காண்பீர்:—

இரு கூலமும் பொருமாநீ ரரங்கத்திலெந்தை யந்தண்,—என்னுமிவ்வடியில், ம் ங் த் ந் ண், என்றமெய் எழுத்துக்களை எண்ணுது மற்ற எழுத்துக்களை எல்லாம் எண்ணினுல் பதினேழு ஆகின்றது. அப்படியே அந்தச்செய்யுளின் மற்ற மூன்றடிகளில் ஒவ்வொன்றிலும் 17 எழுத்துக்கள் இருக்கக் காணலாம். நான்காவது செய்யுளின்,

"ஒருரு வெற்பைத்தரித்தது தானவரும் பருள்ளாய்" என்ற முதலடியின் மெய்யெழுத்துக்களை விட்டுவிட்டு எண்ணினுல் 16 எழுத்து இருக்கும். இச்செய்யுளின் மூன்றுவது அடி மிகவும் நீளமாயிருப்பது போல் தோன்றினுலும் அதனிலும் மெய்யெழுத்துக்கள் போக மற்ற எழுத்துக்கள் பதினறே

இவ்வாறு எழுத்தெண்ணிச் செய்யுள் அமையக்கூடிய இரகசியத்தைப் பின் யாப்பிலக்கணத்தில் அறிவோம்.

### இலக்கணம்.

நிலைமொழி யிறுதியில்உள்ள மகரமெய் வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணரும்போது எந்தவெந்தத் தொடர்களில் கெடாமல், அந்த உயிரோடு சேர்ந்து உயிர்மெய்யாகி இயல்பாகும் என்றதைச் சென்றவாரம் சொன்னேம். எனின், அத்தொடர்கள் தவிர மற்றத்தொடர்களில் மகரமெய் கெடும்.

1 வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்,

(1) ஆரும்வேற்றுமைத் தொகையில், நிலைமொழியீற்று மகரமெய் வருமொழிமுத லுயிரோடு புணரும்போது கெடும்.

மரம் + அடி - மரவடி (மரத்தினுடைய அடி). ஆரும் வேற்றுமைத் தொகை.

பவளம் + ஒளி = பவளவொளி (பவளத்தினுடைய ஒளி) ஆரும் வேற்றுமைத் தொகை.

ம்கெட்டன

எனினும் ஆரும்வேற்றுமைத்தொகைநிலைத் தொடராயிருந்தாலும், நிலைமொழி வினையாலணையும் பெயராகவாவது, இரண்டெழுத்துடையதாகி முதலெழுத்துக்குறிலாகவும் உடைய சொல்லாகவாவது இருக்குமானுல் அவைகளின் இறுதியிலுள்ள மகரமெய் வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணரும்போது கெடாது இயல்பாகவே இருக்கும். உதாரணம்:—

வந்தேம் + இளைப்பு = வந்தேமிளைப்பு (வந்தவர்களாகிய எங்களுடைய இளைப்பு); நிலைமொழி வினையாலணையும் பெயராதலால் ம் கெடவில்லை.

எதிர்த்தேம் + உரத்தை எற்றினன் = எதிர்த்தேமுரத்தை... (எதிர்த்தேமுடைய உரத்தை...) இங்கும் நிலைமொழி வினையாலணையும் பெயர்—ம் கெடவில்லை.

நம் + அழகு = நம்மழகு—நிலைமொழி குற்றெழுத்தை முதலிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாதலால், ம் கெடவில்லை.

கம் + அசைவு = கம்மசைவு (கம் = ஜலம், கம்மினுடைய அசைவு) இங்கும் நிலைமொழி குற்றெழுத்தை முதலிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாகையால் ம் கெடவில்லை. மற்ற மெய்களைப்போல ம் விரிந்தது.

(2) ஆறும்வேற்றுமைத்தொகை தவிர மற்ற வேற்றுமைத்தொகைகளில் உருபுமாத்திரந் தொக்கு இருந்தால் மகரமெய்கெடாது. உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளில்தான் நிலைமொழியீற்று மகர மெய் வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது கெடுகின்றது.

மரம் + அறுத்தான் = மரமறுத்தான் (மரத்தை அறுத்தான்)—இது, உருபுமாத்திரம் தொக்கிருக்கின்ற இரண்டாம் வேற்றுமைத் தொகையாகையால் ம் கெடவில்லை

மரம் + உளி = மரவுளி (மரத்தை வெட்டும் உளி)—இது உருபும் பயனும் உடன்தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை—ஆகையால் ம் கெட்டது.

பாணம் + எய்தபுண் = பாணமெய்த...(பாணத்தால் எய்த)...மூன்றும் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்க தொகை—ம் கெடவில்லை.

மரம் + அகல் = மரவகல் (மரத்தால் செய்த அகல்) மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை—ம் கெட்டது.

நின்குலம் + அழிவில்லை = நின்குல மழிவில்லை (குலத்திற்கு அழிவில்லை) நான்காம் வேற்றுமைத் தொகை—ம் கெடவில்லை.

நின்குலம் + உரிமை பெற்றாய் = நின்குலவுரிமை (குலத்திற்கு உரிய 'உரிமைபெற்றாய்.) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை—ம் கெட்டது. [குலத்தினுடைய உரிமை என ஆறும்வேற்றுமையாகலா மெனினும், குலத்திற்குரிய உரிமை எனத் தகுதிப்பொருளில் நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனக் கொள்வதும் அமையும்]

சயிலம் + இறங்கினன் = சயிலமிறங்கினன் (சயிலத்திலிருந்து இறங்கினன்) ஐந்தாம் வேற்றுமைத் தொகை—ம் கெடவில்லை. [சயிலம்-மலை]

சயிலம் + அருவி = சயிலவருவி (சயிலத்திலிருந்து விழுகின்ற அருவி) —ஐந்தாம் வேற்றுமைஉருபும்பயனும் உடன் தொக்க தொகை—ம் கெட்டது.

நகரம் + இருந்தான் = நகரமிருந்தான் (நகரத்தில் இருந்தான்) ஏழாம் வேற்றுமைத் தொகை—ம் கெடவில்லை.

வானம் + அமரர் = வானவமரர் (வானத்தில் வசிக்கும் அமரர்) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை—ம் கெடவில்லை.

II அல்வழியில், பண்புத்தொகைஉவமைத்தொகை ஆகிய இவ்விரண்டு தொகைகளில்மாத்திரந்தான் நிலைமொழியீற்று மகரமெய் வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது கெடும். மற்றத் தொடர்களில் கெடாது.

(1) பண்புத்தொகை

வட்டம் + ஆழி = வட்டவாழி (வட்டம் ஆகிய ஆழி) பண்புத்தொகை—ம் கெட்டது.

குண்டலம் + அணி = குண்டலவணி (குண்டலமாகிய அணி) பண்புத்தொகை—ம் கெட்டது.

(2) உவமைத் தொகை

பவளம் + இதழ் = பவளவிதழ் (பவளம் போன்ற இதழ். இதழ் - உதடு) உவமைத் தொகை—ம் கெட்டது.

கஞ்சம் + அடி = கஞ்சவடி (கஞ்சம்போன்ற அடி) உவமைத்தொகை—ம் கெட்டது.

மற்றத் தொடர்களில் ம் கெடாமல் இயல்பாயிருந்து வருமொழிமுதல் உயிரை ஏற்று உயிர் மெய்யாவதற்கு உதாரணங்கள் முன்னரே காட்டியிருக்கின்றோம்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.
வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.



# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## 15. பூக்கொய் படலம்.

துனிவரப் பேதை பூண்டா
ரணைவுறுந் துணிவு காண்மின்.

நையுழை கொணர்ந்து தாழ்வுறவணங்கும் மைந்தரெனச் சில,ஒய்யென நிமிர்ந்து ஊடிவிடும் மகளிரெனச்சில,பூங்கொம்புகள் தழைத்த அக்காவினிடை,

வந்தெங் குந்தம் மன்னுயி ரேயோ பிறிதொன்றோ
கந்தந் துன்றுஞ் சோர்குழல் காணாள் கலைபேணாள்
அந்தந் தோறு மற்றுகு முத்த மவைபாராள்
சிந்துஞ் சந்தத் தேமலர் நாடித் திரிவாளும்

[தன் கழுத்தில் அடர்ந்து சோர்கின்ற கூந்தலைக் கருதாளாய், ஆடை நெகிழாமல் காப்பதும் இல்லாளாய், மாலை கோடியறுந்து விழுகின்ற முத்துக்களையும் பாராதவளாய், அழகிய தேன் சொரிகின்ற மலர்களைத் தேடித் திரிவாளாயினாள். இவ்வாறு இவள் அலைவதை நோக்குங்கால் அம்மலர்கள் அவளது உயிர்தானோ, வேறொன்றோ — அறியோம்]

எனக்கம்பர் அம்மாதர்கள் மலர்நாடி முனைகின்ற தன்மையைப் பேசினாராலும், ஊடலுக்கு ஒருகாலும், தீர்ந்த ஊடலின்பின் கூடுதற்கு ஒருகாலும், ஒவ்வோர் செவ்விதேடி மாதரார் திரிந்தனர் என்னலாம் தன்மைத்தே யன்றி அவர் பூ நாடியதெல்லாம் பொய்யெனத் தோன்றுகின்றது. இன்னவர் செயலைக் கம்பர்,

நாடிக் கொண்டாள் குற்ற நயந்தாண் முனிவாற்
றூடிக் காணக் காட்டு நலத்தா ளுடனில்லாள்
தேடித் தேடிச் செய்த செழும்பூ நறுமாலை
சூடிச் சூடிக் கண்ணடி நோக்கித் துவள்வாளும்.

[தன் நாயகன்பால் குற்றம் காணவேண்டுமென்று மிகவும் விரும்பி முயன்றவள் அதனைக் காணப்பெற்றாள். தானாகமுயன்று தேடிக்கொண்ட அக்குற்றத்தைக்கண்டு தணியாத கோபமுடையவளாயினாள். அதனால்தன் ஊடல் நிலையில் காட்டுகின்ற நலம் பெற்றவளாகி அவனருகு நில்லாமல் விலகிப்போய், தான் தேடித்தேடித் தொடுத்த செழும்பூவின் வாசனையமைந்த மாலையைத் தானே சூடிக்கொண்டு கண்ணடியைப் பார்த்தவண்ணம், இவ்வழகிய காட்சியைத் தன்கணவனுக்கு அளிப்பதற்கில்லையே என்று துவள்பவ ளாயினாள்]

என இனிதின் எடுத்துக் காட்டுவதால் பூப்பறிப்பதென்னுமது நியமன்றி நிசமன்று என்ன எளிதில் துணியலாம். குற்றம் நயந்தவள் நாடிக்கொண்டனள் அதற்குக் காரணமும், ஊடிக்காணும் நலத்தைக் காட்டவேண்டும் என்னும் உட்கருத்தேயாகும். துனிவரும் நலத்துத் தோகையர்தன்மையைக் கம்பர் நன்கு பாராட்டுகின்றனர். இவ்வகைத்தம் நாயகர்பால் நாடிக்கொண்ட நவைகள் யாவும் நொய்மைபால் நகைத்தற்கொத்தன:—

போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொண்டோள்
மாரன் னனையான் மலர்கொய்திருந் தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்பு தைப்ப
ஆரென்ன லோடு மனலென்ன வயிர்த்து யிர்த்தாள்

[மேகம்போன்ற கூந்தலையுடைய குயில்போன்றவள்ஒருத்தி பின்புறமாகவந்து, போர் என்ற சொல்லைக்கேட்டமாத்திரத்திலேயே பூரிக்கின்ற மலையையொத்த பொன்போன்ற வலிய தோள்களையுடைய மன்மதன் அனைய ஒருவனை விளையாட்டாகக் கண்களைப்பொத்த, அவன் 'யார் அது' என்று கேட்கவே இவள் பெரியதோர் சந்தேகத்தால் பீடிக்கப்பட்டவளாய்க் கனன்று நெட்டுயிர்ப்பு வீங்கலாயினள்]

இவனது கண்களைப் பொத்தி விளையாடுதற்கொத்தவுரிமை தனக்கல்லால் வேறு ஒருத்திக்கு இருந்தாலல்லவோ இவன் யாரென வினவுதல் வேண்டும். மற்றவ்வகை வினவியதால் இவன் காதல் கொண்டுள மாதர் பலர் இருப்பது இம்மங்கைக்கு இன்று,அற்றம் காவா அவன் நாவால் வெளியாயிற்றுஎன்ன ஊடினாள்.

இன்னொரு சூழலில்,

செம்மாந்த தெங்கின் னிளநீரையோர் செம்ம னோக்கி
அம்மா விவைமங் கையர்கொங்கைக ளாகு மென்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பென வென்றோ ரேழை
விம்மா வெதும்பா வெயராமுகம் வெய்து யிர்த்தாள்.

[உயர்ந்தோங்கிய தென்னமரத்தின் இளநீர்க்காயை ஒரு நாயகன் நோக்கி, "என்ன விந்தை இது, இக்காய்கள் மங்கையர்களது கொங்கைகளை நிகர்க்கும்" என்று கூற, அருகிருந்த நாயகி, "ஐய இவை எந்த மாதர்களுடைய கொங்கைக்கு ஒப்பாகும்" என்று விம்மிக் கொதித்து முகமெலாம் வியர்க்க நெடுமூச்சு எறிந்தாள்]

மாதரெனப் பன்மையிற் சொன்னது ஒருபுறமிருக்க, பழையதோர் உவமையைப் புதுமையாய்க் கண்டதுபோல் நடித்துப்பகரும் புன்கவிக்கு நிகரான பாவம் அவனைச் சூழ்ந்தது. ஆயினும், அவ்வேழை குற்றமே நயந்த கொள்கையளாதலால், பன்மையுமொழித்து உவமையுமொழித்து மொழிந்தானெனினும் இச்செம்மல்தான் அவள் சீற்றத்தைத் தப்புவான் என்பதற்கில்லை. ஏனெனில், தெய்வயானையின் திருமணம் காணிய சென்ற முசுகுந்தன் பரிவாரித்தினுள்ளவர் ஓர் பொழிலகம்புக்குப் பூக்கொய்தயரும் வேளை,

அங்கொ ருத்தியை நோக்கியொ ரண்ணலுன்
கொங்கை பொத்திடாக் கோங்கலர் கொள்கென
எங்கை தன்முலைக் கொப்பதென் றெண்ணியோ
செங்கையாற் பறித்தீ ரென்று சீறினாள்.

[அங்கு ஒரு ஆண்மகன், ஒருத்தியை நோக்கி, "உன்னுடைய கொங்கைக்கு நிகராகாத இந்தக் கோங்குமலரைப் பெற்றுக்கொள்" என்று நீட்ட, "மற்று என் மாற்றான் கொங்கையை ஒத்திருக்கின்றதென்னும் ஆதரவினாலோ உம் சிவந்தகையினால் பறிக்கலாயினீர்," என்று சீறினாள்]

நங்கைமார் கொங்கை போன்ம் நளிரிளநீர், என்றனை வெகுண்டாள் ஒரு பேதை. நின்கொங்கை பொவ்வாப் போது இது என உரைத்தானும் வெகுளப்பெற்றான். மற்று அம்முசுகுந்தனொடு சென்றவர்களுள்,

இங்குன் முலைநேர் குரும்பை யிவையாய் குயம்போற்
றங்கும் மிளநீ ருவையன் னவடன் னையீன்றாள்
கொங்கை நிகரு மடற்பா ளைக்குழு விதென்றோர்
மங்கை நகைப்ப வவைகாட் டியொர்வள்ள னின்றான்

["இங்கு உன் முலையொக்கும் குரும்பை இவை. உன் தாயின் முலைகளைப்போல் இருக்கும் இளநீர் அவை. உன் தாயைப் பெற்ற பாட்டியின் முலைகளை நிகர்க்கும் அந்த மடற்பாளைகள்" என்று ஒரு மங்கை நகைக்கும்வண்ணம் மேன்மகன் ஒருவன் அவைகளைக் காட்டிநின்றான்]

மூன்று தலைமுறை முலைக்குஉவமை தெங்கின் மரத்தில் முபன்றுகாட்டிய இவ்விழுதையின் மொழிகளை மாதரை நகைக்கச் செய்வனபோலும். அல்லது மற்றதற்கெலாம் சீற்றங்கொள்ளும் அவர் மதியைப் பரிகசித்து இத்தாழ்ந்த சொற்களால் அவர்களைச் சிரிப்புமூட்டித் தன் பழிதீருமாறு புரிந்தனனோ, யாதோ!

உவமை நோக்கமே அவதி தந்ததெனின், முசுகுந்தன் குழாத்துள் வேறொருவன், மெய்யாகவே
மலையும் வேற்கணா ளொருத்தி சொல்வினவி மற்றொருத்தி
முலையின் மேல்விழி வைத்தவன் முறிகளு முகையும்

இலையு மாப்பறித் துதவலு முமக்குமா லீந்தாள்
தலையின் மேலிவை சூட்டுமென் றெறிந்தனள் தரியாள்.

[போர்புரியும் வேல்போன்ற கண்களுடைய ஒருத்தியின் சொல்லைக்கேட்டு அவளுக்குப் பூப்பறித்துத் தரச் சென்று, மற்றொருத்தியின் முலையின்மேல் தன் பார்வையை நாட்டினவனாய், தளிர்களையும் முகையையும் இலையையும் பறித்து முன் கேட்டவளுக்குக் கொடுக்க அவள், "உம்முடைய புத்தியை இப்படி மயங்கச்செய்த அவளுடைய தலையிலேயே இவைகளைச் சூட்டும்" என்று பொறுக்காமல் கோபித்து எறிந்து விட்டாள்]

எனின் அச்சீற்றம் தக்கவிடம் தேர்ந்துகொண்டதே யாகும். தயரதனுடன் சென்றொருவனும்,

சினையின் மேலிருந் தானுருத் தேவரால்
வனைய வும்மரி யாள்வனப் பின்றலை
நினைவு நோக்கமு நீக்கலன் கைகளால்
நனையு நாண்முறி யுங்கொய்து நல்கினான்

[கிளையின்மேல் இருந்தவனாய், தேவராலும் இவளனைய உருவம் எழுதவும் இயலாத தன் நாயகியின் அழகிலேயே தன் நினைவையும் பார்வையையும் அகலாது வைத்தவனாகிக் கைகளால் மொக்குகளையும் இளந் தளிர்களையும் பறித்துக் கொடுத்தான்]

எனினும் இம்மங்கை, மலரினும் பன்மடங்கு ஆர்வமொடு அந்நனையையும் முறியையும் தன்னுடைய தலையிலேயே, அந்நாயகன் அன்பனைத்தும் தன்வயமாக்கிக்கொண்ட வெற்றியம் பதாகையெனச் சூடிக் கொண்டிருப்பாள். நனையும்நாண்முறியும் கொய்யுமிவ் வயர்வு கந்தபுராணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் பொதுவுற நிகழ்ந்ததாயினும், மற்றொருத்தி முலையின்மேல் விழிவைக்கும் இழுக்கின்றி ஆசலம்புரி ஐம்பொறிவாளியும் நெறியின் புறஞ்செலாக் கோசலம் வளர் நம்பிமார்செம்மையைக் கம்பர் தம்நூலுள் காத்துக்கொண்டனர். ஆய்குயமும் அவளையீன்ற அன்னை நகிலமும் முதியோள் முலையும் இருந்தவாறும் இவர் நோக்கிலார்.

இவ்வகை வீணிற்கெல்லாம் புலந்து வாடுமிவ் வனிதையர் எத்துணைப்பேதைய ராதல் வேண்டும்! ஆம், பேதைமை பெரிதுடைய பெண்டிரே இவர். ஒருத்தி,

மெய்ப்போதி னங்கைக் கணியன்னவண் மென்ப ளிங்கிற்
பொய்ப்போது தாங்கிப் பொலிகின்றதன் மேனி நோக்கி
இப்பாவை யெங்கோற் குயிரன்னவ ளென்ன வுன்னிக்
கைப்போதி னோடு நெடுங்கண்பனி கார நின்றாள்

[உடல் முழுவதும் மலர்களால் அலங்கரித்துக்கொண்டிருந்த மாதர்களுக்கெல்லாம் அணிகலம் போன்றவள், வெண்மையான பளிங்கில் மலர்களால் விளங்குகின்ற தன்னுடைய பிரதிபிம்பமான பொய் உருவத்தை நோக்கி, (அது வேறொருத்தி யென்றும், அவள் தன்னினும் அழகில் விஞ்சியவள் என்றும் மயங்கி) இவளை என் நாயகன் காண்பானாயின் அவனுக்கு இவள் உயிர்போல் ஆகிவிடுவாள் என்று எண்ணிப் பொறாமையால் தன் மலர்போன்ற கரங்களை முகத்தோடு சேர்த்துக் கண்ணீர் சொரியலானாள்]

இவள் தன்சாயலை வேறொருமாதென்றெண்ணினாள். தன்கண் முகிழ்த்திருந்து பாலையருந்தினால் யாரும் பாரரென மதிக்குமப் பூனை போல், இன்னொரு ஏழை,

பொன்னே தேனே பூமக ளேகா ணென்னைத்
தன்னே ரில்லா னங்கொரு கொய்யற் றழைமூழ்க
இன்னே யென்னைக் காணுதி நீயென் றிகலித்தன்
நன்னீ லக்கண் கையின் மறைத்து நகுவாளும்

[தனக்கு நிகரில்லா மேன்மைவாய்ந்த வொருவன், மறைந்து பிடிக்கும் விளையாட்டயர்வானாகித் தன் நாயகியை, "பொன்னனைய மேனியுடையவளே, தேன்போன்ற இனிமையுடையவளே, இலக்குமிபோன்ற அழகுடையவளே, நான் ஒளிந்துகொள்கின்றேன், நீ பிடி பார்ப்போம்" எனக் கூவி அங்கு ஓர் அடர்ந்த தழைகளுக்கிடையே மறைந்துகொள்ள, இவள் அதற்கெதிராய், "இப்பொழுது நீ தான் என்னைக்கண்டுபிடி பார்ப்போம்" என்றுதான் இருந்த இடத்திலேயே, மிகவும்கரிய குவளைபோன்ற தன் கண்களைக் கைகளால் பொத்திக்கொண்டு சிரிக்கலுற்றாள்]

இப்பரிசு பேதைமைபூண்ட மங்கைமார், உண்மையினை ஓராது உற்றதற்கெலாம் ஊடுவாரெனினும் பின் அவர் ஊடல் தணிந்து, பிரிந்துநின்ற நாயகரைக் கூடுதற்குச் செய்யும் சூழ்ச்சிகளோ சிறிதல. இதனாலோ "விடுவிக்க இயலாத புதிராவார் மாதர்" என்று சிலர் செப்புகின்றனர். ஒருத்தி,

மைதாழ் கருங்கண்கள் செவப்புற வந்து தோன்ற
நெய்தாவும் வேலா னொடுநெஞ்சு புலந்து நின்றாள்
எய்தாது நின்ற மலர்நோக்கி யெனக்கி தீண்டுக் .
கொய்தீதி யென்றோர் குயிலைக்கரங் கூப்புகின்றாள்.

[மையிட்ட கரிய கண்களில் செந்நிறம் வந்து தோன்ற, நெய்பூசிய வேலுடைய செம்மலோடு மனத்தில் பிணங்கியிருந்தவள், எட்டாதிருந்த மலரைப்பார்த்து, "எனக்கு இதனைப் பறித்துக்கொடு" என்று அங்கு ஓர் குயிலைக் கரங்குவித்துத் தொழுகின்றாள்]

பூமேல் இருந்த விருப்பமெனின் அவள் கைக்கு எட்டும் மலர்கள் எத்துணையோ வுள. "நின்னுதவியின்றி யான்வேண்டுவன எய்தும் வகை வேறிலையோ" என்ன இது தொனிக்கின்றதே யாயினும், குயிலைத் தொழும் கரத்தாள்பால் இரங்கிய நெஞ்சினனாய் அவன் உரையாட வரவேண்டுமென்பதே இவள்நோக்கம். இன்னொருத்தி,

யாழொக் குஞ்சொற் பொன்னனை யாளோ ரிகன் [மன்னன்
தாழத் தாழா டாழ்ந்த மனத்தா டளர்கின்றாள்
ஆழத் துள்ளுங் கள்ள நினைப்பா ளவனின்ற
சூழற் கேதன் கிள்ளையை யேவித் தொடர்வாளும்

[யாழ் அனைய மொழியையுடைய இலக்குமிபோன்றவள், வலியமைந்த மன்னவன் தன் ஊடலைத் தணிக்கும் பொருட்டுப் பணிந்தபொழுதெல்லாம் தான் இளகாது இருந்துவிட்டுப் பிறகு அவன்பால் விருப்பம் மேலிட்ட மனத்தவளாய் அவனை அடைவதெங்ஙனம் எனத் தளர்வாளாகிப் பின் தன் ஆழமான எண்ணத்துள் துன்னுகின்ற வோர் கள்ளத்தால், அவன் ஒதுங்கிஇருந்த இடத்திற்குத் தன் கிளியைப் பறக்கவிட்டு அதனைத் தொடர்பவள்போல் நெருங்குவாள்]

காரிகையார் கள்ளம் இன்னபடி இருக்கின்றது. நம்பியோ தன்னுயிர்க் காதலியின் துனியை மாற்றுதற்குத் தான் அடிபணிந்தெழுந்தபின் அவள் மனநிலை எவ்வகைத்தெனப் பதம்பார்க்கும் வண்ணத்தைக் கருதுங்கால், இவனே பேதை என்னலாகின்றான். நாகரக்கக் கற்காது ஊடலைவிளைவித்து, அதனைப் போக்குதற்கும் இயலாத நொய்மையன் நெய்தாவும் வேலோனேயாகக் காண்கின்றோம். அவள் தொண்டைவாயில் துடிப்பொன்று சொல்ல, உண்டுகோபமென்றிவன் உள்ளத்துணர்ந்து தடுமாறுகின்றான். தடுமாற, அழகிய தன் மாலையணிந்த மார்பில் மன்மதன் ஐங்கணை நூறாயிரமாகப்பாய இன்னசெய்வதென்றோராதவனாகி அவளை, "யான் கொண்டுள மந்தாரத்தைப் பெற்று நின் கையுள்ள மாதவிமலரைத் தருவாயோ" என்று பரிவர்த்தனை பேசுவதல்லால் இவனுக்கு இதனினும்ஆழ்ந்த சூழ்ச்சி வேறொன்றுந் தோன்றவில்லை. இவனைப் பார்த்தகண்ணிற்குப் பாண்டிய மன்னனோடு சோலை சேர்ந்த,

மதுகைவா ளொருவ னங்கோர் மங்கைதன் வடிவு நோக்கிப்
பதுமமே யடிகை காந்தள் பயோதரங் கோங்கு காவிப்
புதுமலர் விழிவா யாம்பற் போதுநும் மூர லெப்போ[றான்
ததனைவாய் திறந்து காட்டிப் போமினென் றடுத்து நின்

[வலிபொருந்திய வாளுடையவொருவன், மங்கையின் வடிவைப்பார்த்து, "உன் பாதமோ தாமரை, கையோ காந்தள், முலையோ கோங்கு, விழிகளோ நீலோற்பலம், வாயோ ஆம்பல் மலர். இனி உன் பற்கள் எம்மலர்கள் என்பதை நான் அறியும்படி வாய்திறந்து காட்டிவிட்டுப் பின் போவதானால் போகலாமே" என்று அவளை அடுத்துநின்றான்]

என்று பரஞ்சோதிமுனிவர் புனைகின்ற புருடன் ஒருசிறிது வாய்வன்மை யுடையான்என்றே எண்ணல் வேண்டும். இதனிற்கு நகையாத நங்கை இருப்பதரிது.



## ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் பாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச், சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்த நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

## திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

நூதனம்! அதிசயம்!!

குறைந்த விலைக்கு விற்பனை!!!

எலெக்டிரிக்

## மேஜை விளக்கு



இந்த விளக்கு மேஜையின் மேல் வைக்கக்கூடியதாய்ப் பல் புடனும் மேல் மோமுடனும் இருக்கிறது. ஸ்விட்ச்சைப் போட்டவுடன் பளிச்சென்று நல்ல பிரகாசத்தை நாலா பக்கமும் பரப்புகிறது. விசேஷ சமயங்களிலும், சபைகளிலும் கூட்டங்கள் மத்தியிலும் இந்த விளக்கை வைத்துக் கொண்டால் ஒருவித கஷ்டமுமில்லா திருப்பதோடு மிக அழகாகவுமிருக்கும். மாணுக்கர்கள் மேஜையின் மீது வைத்துப் படிக்கச் சௌகரியமானது. உடனே எழுதுங்கள். இந்தத் தினுசில் சில விளக்குகளே கையிலிருக்கின்றன.

குறைந்த விலை ரூபாய் **4 8 0**

தபால் செலவு வேறு.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,

173, தங்கசாலை வீதி, மதராஸ்.



## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணியாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... ... | ரூ | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் ... | | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... ... | | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் ... | | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... ... | | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபாலதலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலாநிலயம்:—வேளாளர் தெரு,

புரசைவாக்கம், சென்னை.



## குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

## பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா **1 4 0**

,, சாதாரண கட்டடம் ,, **1 0 0**

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.



## Our Publications

**Kamban's Kosala.**

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

**The Educational Publishing Co.,**

**Nungambakam, Madras.**




# வர்த்தமானம்

சென்னைக்குக் கவர்னராக வரவிருக்கின்ற, மிஸ்டர் ஜார்ஜ் பேடரிக் ஸாடான்லி என்பவருக்குச் சென்ற சனிக்கிழமையன்று மன்னர்பிரான் ஸர் பட்டமும் ஸ. ஐ. இ. பட்டமும் அளித்தனர்.

***

ஸர். P. C. ரே, என்பவர் தன்னுடைய சம்பளத்திலிருந்து சேர்த்துவைத்திருந்த 90000 ரூபாயையும் கல்கத்தாச் சர்வகலாசாலைக்கு நன்கொடை யளித்துவிட்டார். கெமிஸ்ட்ரி (இரசாயனக்)கல்வியின் வளர்ச்சியின்பொருட்டு இப்பொருளைப் பயன்படுத்தச் சர்வகலாசாலையார் தீர்மானித்திருக்கின்றனர்.

***

விவாகசம்பந்தமாகச் செய்வதற்கிருக்கும் சட்டங்கள் தக்கதல்லவென்று தமது அபிப்பிராயத்தை வைஸராய்க்குத் தெரிவிப்பதற்காகத் திவான்பகதூர் T. R. இராமசந்திர ஐயரவர்களைத் தலைவராகக் கொண்ட பல பிரமுகர்கள் சென்ற நாயிற்றுக்கிழமை சென்னையைவிட்டுச் சிம்லாவிற்குப் புறப்பட்டார்கள். இவர்களைப் பஜவாடாவில் உள்ள சிலர் ஸ்டேஷனில் சந்தித்து உபசரித்தனர்.

***

ஹைதராபாத் ஸமஸ்தானத்தில் பல தொழிற்சாலைகளும் மில்களும் வைத்து நடத்துகின்ற ஸர். கரீம் பாய் என்பவர்க்கு வேலைநிறுத்தம் முதலியகாரணங்களால் உண்டான பணகஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக, ஹைதராபாத் நிஜாம் மன்னர் அவருக்கு 50 லக்ஷரூபாய் குறைந்த வட்டிக்குக் கடனாகக் கொடுக்க இருக்கின்றார் எனத் தெரிகின்றது.

***

33-வது தமிழ்மாகாண மகாநாடு வேதாரண்யத்தில் இம்மாதம் 31 தேதியிலும் செப்டம்பர் 1 தேயிலும் நடைபெறும். ஸ்ரீமான் வல்லபாய் பெடேல் அவர்களே தலைமை வகிப்பார். ஸ்ரீமான். எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார். அதனோடு ஏற்படுத்தப்பட்டிருக்கிற பொருட்காட்சிச் சாலையை ஸ்ரீமான். ஸி. இராஜா கோபாலாசாரியாரவர்கள் திறந்துவைப்பார்.

***

இங்கிலாந்திலுள்ள 'நியூலீடர்' என்னும் பத்திரிகை, இவ்வுலகத்தி லுள்ளவர்களிலெல்லாம் இந்நாள் மிகவும் மேன்மைவாய்ந்த பெரியோர் யார் என்று தெரிவிக்கும்படி ஒரு 'போட்டி' நடத்தி வந்தது. இப்போட்டியில் ஜனங்களின் பெரும்பான்மையோர் தெரிவித்த அபிப்பிராயத்தைத் தொகுத்துப்பார்க்குங்கால், ஜார்ஜ் பரனுர்ட் ஷா, மகாத்மாகாந்தி, ஈன்ஸ்டின், புருட், சார்லிசாப்லின், என முறையே பெரியோர் எவ்வெவரென்று உலகங்கருதுகின்றதென்பது தெரிகின்றது. டாக்டர் பெஸன்ட் அம்மையாரும், கவி இரவீந்திரரும் இவ்வரிசையில் பிந்திய இடம் பெறுகின்றனர்.

***

கொழும்புநகரில், K. M. முஹம்மது ஸாலிஹு என்பவரை ஆசிரியராகக் கொண்டு இம்மாதத்தில் ஆரம்பத்திருக்கின்ற நூருல் ஸ்லாம் என்ற மாதாரம்பச் செந்தமிழ்ப் பத்திரிகையின் முதலிதழ் வரப்பெற்றோம். இது முக்கியமாக மகம்மதியர்களின் முன்னேற்றத்தைத் தன் நோக்கமாகக் கொண்டுள்ளது. "குர்ஆன் திருவசனம்," "நாயக நற்போதம்" போன்ற விஷயங்களும், ஸாதியின் நீதி மொழிகளின் சிலவற்றின் மொழிபெயர்ப்பும், உமர்கையூமின் தத்துவ ஆராய்ச்சியும் இவ்விதழில் அடங்கி இருக்கின்றன. இவைதவிர வியாபாரிகள் கவனிக்க வேண்டிய விஷயங்கள், விகடத்துணுக்குகள் முதலியவைகளும் உள.

இந்தியா பர்மா சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு வருடசந்தா ரூ. 1—8—0. ஆனால்,முஸ்லீம் அல்லாதவர்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் ரூ. 1-0-0 சந்தா. வெளி நாடுகளுக்கு ரூ. 2-0-0. இப்பத்திரிகை, 119, லெயார்ட்ஸ், பிராட்வே, கொளம்பு, என்னும் விலாசத்தில் பிரசுரமாகின்றது.

***

ஸர் M C.T. முத்தையசெட்டியார் ஹைஸ்கூல்:— சென்னைப் புரசைபாக்கத்தில் இதுகாறும் கலவல இராயானுஜஞ் செட்டியார் பேரால் நடைபெற்று வந்த உயர்தரப் பாடசாலையை ஸர். M. C. T. முத்தையசெட்டியா ரவர்களது மைந்தர் ஸ்ரீமான் சிதம்பரம்செட்டியாரவர்கள் சென்றவெள்ளிக்கிழமையிலிருந்து தன்னுடைய ஆதரவில் நடத்திவைக்க ஏற்றுக் கொண்டிருக்கின்றார். அதன் காரணமாக அப்பாடசாலையின் பெயர், அவர் தந்தையின் ஞாபகார்த்தமாக ஸர் M. C.T. முத்தையசெட்டியார்பாடசாலை என்று மாற்றப்பட்டது. அச்சமயம் திவான் பகதூர் T. ரங்காசாரியார் அவர்கள் தலைமைவகிக்க, இராஜா ஸர். அண்ணுமலைச் செட்டியாரும், ஸ்ரீமான் K. V. L. அழகப்ப செட்டியாரும் இச்செயலின் அருமையைப் பாராட்டிப் பேசினர். ஸ்ரீமான் சிதம்பரம் செட்டியார் இப்பாடசாலைக்குப் புதிய கட்டிடம் முதலானவைகளை அமைப்பதற்கு வேண்டிய பொருளுதவி செய்ய மனங்கொண்டுளார். இக்கருமம், அப்பாடசாலையின் காரிய நிர்வாகத்தைக் கைக்கொண்டுள ஸ்ரீமான் திவான்பகதூர் V. மாசிலாமணிப் பிள்ளை அவர்களின் முயற்சியால் நிறைவேறியதென அறியலாகின்றோம்.

***

மலேயாநாட்டில், பாட்டு பகட் என்னு மிடத்தில் சென்ற ஜூன் மாதம் 7உ யன்று இந்திய ஸிலோனியர் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது அச்சங்க ஸ்தாபனகாலத்தில் தலைமைவகித்த டாக்டர் N. S. நாதர் என்பவர் செய்த பிரசங்கம் அச்சிடப்பெற்ற புத்தகமாய் வரப் பெற்றோம். அச் சங்கம் கல்வி விஷயமாகவும் கூட்டுறவுபற்றியும், பொது ஜனவாழ்க்கை முன்னேற்றம் அடைவதைப்பற்றியும், ஸிலோனியர்களும் இந்தியர்களும், மலேயேநாட்டில் கைக்கொள்ளவேண்டிய முறைகள் இன்னவையென்றும் அம்முறைகளை அச்சங்கத்தார் எவ்வெவ்வகைகளில் நடத்திவைக்கலா மென்பதும் மிகவும் அருமையாக டாக்டர் N. S. நாதர் தம் பிரசங்கத்தில் எடுத்துக் காட்டியிருக்கின்றார். பிரமசரியாசிரமத்தை முடித்துக்கொண்டு இல்வாழ்க்கைக்கு ஏகுகின்ற தம் சீடர்களை நோக்கி, பண்டைநாள் ரிஷிகள், "வாய்மையைப் பேசு; நாடோறும் வேதங்களை ஓதுவாய்; கடவுளுக்கும் மனிதருக்கும் தேசத்திற்கும் அன்றன்று ஆற்றவேண்டிய கடமையை ஆற்றுவாய்; நின் குலத்தின் தொடர்ப்பு இடையே அறுமல் காத்துக் கொள்" என்று விதித்து அனுப்பும் அறிவுரைகளிலும் சிறந்தவழி நம் வாழ்க்கைக்கு வேறு இல்லை என்று டாக்டர் N. S. நாதர் ஊக்கமோடு உரைப்பதை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam MADRAS.**

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நீஷேன் எபிகுயூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,*

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

*E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தரனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | பையின்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| | ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| | காலிகோ பயிண்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

**கலா நிலயம் ஆபீஸ்**, 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)